# இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை

# நிறுவனத்தின் பின்புலம் - 2015

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு**

354/2, 7வது மாடி, நிபுணதா பியச, எல்விடிகல மாவத்தை, நாரஹேன்பிட்டிய, கொழும்பு 05

2015

**நிறுவனத்தின் பின்புலம்**

| | |
|---|---|
| நிறுவனம் | : இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை |
| அமைச்சு | : தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு |
| முகவரி | : 354/2, 7வது மாடி, நிபுணதா பியச, எல்விடிகல மாவத்தை, நாரஹேன்பிட்டிய, கொழும்பு 05 |
| மின்னஞ்சல் முகவரி | : chairmannhrdc@yahoo.com |
| இணையத்தள முகவரி | : www.nhrdc.gov.lk |
| தொலைபேசி | : 0112595680 |
| பக்ஸ் | : 0112595680 |
| வங்கியாளர்கள் | : இலங்கை வங்கி<br>மக்கள் வங்கி |

## தலைவரின் அறிக்கை

1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை மனித வள அபிவிருத்தி சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இந்தச் சபை குறுகிய காலத்தினுள் பல்வேறுபட்ட அமைச்சுகளின் கீழ் செயற்பட்ட போதிலும், 2015ம் ஆண்டிலிருந்து தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

2015ம் ஆண்டு இந்த நிறுவனம் நிறுவப்பட்ட சட்ட நோக்கத்திற்கு அமைவாக ஊழியர் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுடன், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களும் ஒழுங்குசெய்யப்படுகின்றது. அத்துடன், நிர்ணயிக்கப்பட்ட தொலைநோக்கினைப் பூர்த்தி செய்வதற்கு அடையாளம் காணப்பட்ட செயற்பணியைப் பூரணப்படுத்துவதற்கு எதிர்கால ஆராய்ச்சிகளுக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணக்கமாக வடிவமைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்காக பொதுத் திறைசேரியினால் மூலதனச் செலவுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 20 மில்லியன் வரையறைக்குள் 2015ம் ஆண்டுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டது.

இந்தக் கருத்திட்ட தேர்வின் போது, பிரிவு 14.1 இல் குறிப்பிட்ட பிரதான பரப்புகளை பூர்த்தி செய்வதற்கு அடையாளம் காணப்பட்டவைகள் ஆகும். அவை

(அ) தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி
(ஆ) விஞ்ஞானம் மற்றம் தொழில்நுட்பத்தின் பிரயோகம்
(இ) சிறந்த வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல்.
(ஈ) பின்தங்கிய குழுக்களில் உள்ள நபர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வடிவமைத்தல்
(உ) பொருளாதார சீரமைப்பு மூலம் உரிமைகளைப் பாதுகாத்தல் அல்லது தொடர்புடைய மனித வளத்தை ஒருங்கிணைத்தல்

“எதிர்காலத்திற்கு தயாரான தொழிற்படை” எனும் தொலைநோக்கைக் கொண்டிருக்கும் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை, வினைத்திறன் மற்றும் செயற்திறன் மிக்க சேவைகளை வழங்கும் நோக்கத்துடன், இலங்கை மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்கு கீழ்வரும் கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் 2015இல் அமுல்செய்தது.

## 2015ம் ஆண்டிலுள் அமுல்செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

### 100 நாட்கள் நிகழ்ச்சித்திட்டம்

புதிய அரசாங்கத்தினால் அமுல்செய்யப்பட்ட 100 நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள கீழே இலக்கம் 31, 55 மற்றும் 58 இன் கீழ் குறிப்பிடப்பட்ட இலக்குகளை பூர்த்திசெய்வதற்கு அவசியமான விதப்புரைகள் பிரபல்யமான நிபுணர்களை உள்ளடக்கிய குழவின் ஊடாக இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை அவசியமான கொள்கைத் தீர்மானங்களை மேற்கொண்டது.

31. இளைஞர்களை அமைதியின்மைப்படுத்துவதற்கு காரணமான தொழில்வாய்ப்பின்மையை இல்லாதொழித்தல் எனும் இலக்குடன் ஒரு மில்லியன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களையும் சுயதொழில்வாய்ப்புக்களையும் வழங்குவதற்கு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

55. 5 வருடத்தினுள் மொத்த தேசிய உற்பத்தியில் இருந்து கல்விக்கான ஏற்பாடுகளை 1.5% வீதத்திலிருந்து 6% வீதத்திற்கு அதிகரித்தல்.

58. உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் உயர் டிப்ளோமா அல்லது பட்டப் படிப்பைத் தொடர்வதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

புதிய அரசாங்கத்தினால் அமுல்செய்யப்பட்ட 100 நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள கீழே இலக்கம் 58 இன் கீழ் குறிப்பிடப்பட்ட உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் உயர் டிப்ளோமா அல்லது பட்டப் படிப்பைத் தொடர்வதற்கு சந்தர்ப்பங்களை வழங்குதல் தொடர்பாக நடாத்தப்பட்ட செயலமர்வுகளின் ஊடாக கீழ்வரும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டது. உள்நாட்டு பல்கலைக்கழகங்களுக்கு தகைமைபெற்றவர்களை சேர்த்துக்கொள்ளும் எண்ணிக்கையை அதிகரித்தல்.

1. அரச கல்வி நிறுவனங்களில் மூன்றாம் நிலைக் கல்வியைக் கற்பதற்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தல்.
2. மூன்றாம் நிலைக் கல்வியை வழங்கும் தனியார் நிறுவனங்களை ஒன்றிணைத்தல்

இலக்கம் 55 இன் கீழ், 5 வருடத்தினுள் மொத்த தேசிய உற்பத்தியில் இருந்து கல்விக்கான ஏற்பாடுகளை 1.5% வீதத்திலிருந்து 6% வீதத்திற்கு **அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களில் இருந்து குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள்**.

ஆரம்ப, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி மற்றும் உயர் கல்விகளுக்கு முறையே தலைமை வகிக்கும் பேராசிரியர் திருமதி மேரி பீரிஸ், பேராசிரியர்

லக்ஷ்மன் ஜயதிலக, பேராசிரியர் மலிக் ரணசிங்க மற்றும் பேராசிரியர் பி.எஸ்.எம் குணரத்ன அவர்களைக் கொண்ட குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட குழுக் கலந்துரையாடல்களில் இருந்து கல்விக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தினை 1.5% வீதத்திலிருந்து 6% வீதத்திற்கு அதிகரிப்பதற்கு கீழ்வரும் விதப்புரைகள் வழங்கப்பட்டது.

**கல்வி அமைச்சின் கீழ் சாட்டுதல் மற்றும் உரிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.**

1. மனநிலை அல்லது சமூகப் பிரச்சினைகளைக் கொண்ட மற்றும் அங்கவீனமுற்ற விசே தேவைகளுக்குட்பட்டவர்கள் மீது அதிக கவனத்தை செலுத்துதல்.
2. உயர் தரத்தில் விஞ்ஞானத்துறையில் கல்வி கற்பிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கையை 900 இருந்து 1500 ஆகவும் தொழில்நுட்ப துறை பாடசாலைகளின் எண்ணிக்கையை 250 இருந்து 100 ஆகவும் அதிகரித்தல்.
3. அவர்களின் திறமையின் அடிப்படையில் ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பினை வழங்குதல்.
4. கல்வித்துறையில் அதிக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு தேசிய கல்வி நிறுவனத்திற்கு ஒதுக்கப்படும் வருடாந்த ஒதுக்கீட்டை அதிகரித்தல்.
5. அவர்களின் விருப்பத்துடன் எந்தத்துறையிலும் மூன்றாம் நிலை அல்லது தொழில்கல்வியை கற்கும் மாணவர்களுக்கு வவுச்சர் முறைமையின் ஊடாக அவர்களுடைய உயர் கல்வி செலவுகளை பூர்த்திசெய்வதற்கு தகைமைபெற்ற மாணவர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குதல்.
6. தனியார் பல்கலைக்கழகங்களுக்கு சமமாக உயர் தரப் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றதில் இருந்து குறைந்தது 6 மாதங்களினுள் அரச பல்கலைக்கழக அனுமதியை வழங்குதல்.
7. 17% வீதத்திலிருந்து 25% வீதமாக உயர் கல்விக்கான ஆட்சேர்ப்பு எண்ணிக்கையை அதிகரித்தல்.
8. சர்வதேச தொழில் மற்றும் மாநாடுகளில் பங்குபற்றுவதற்கும் பட்டப்பின்படிப்பினை மேற்கொள்வதற்கும் அரச அனுசரணையை பல்கலைக்கழக ஊழியர்களை வலுவூட்டுவதற்காக வழங்குதல்.
9. உள்நாட்டு பல்கலைக்கழகங்களினால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு 3 – 6 மாதம் வரையிலான சர்வதேச புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொள்வதற்கான அணுகலை வழங்குதல்.
10. சர்வதேச மற்றும் வெளிநாட்டிலிருந்து வருகை தரும் மேற்பார்வையாளர்கள் ஊடாக உயர் கல்வியின் தரத்தினை சான்றழித்தல் மற்றும் உறுதிப்படுத்தல்.

31. **இளைஞர்களை அமைதியின்மைப்படுத்துவதற்கு காரணமான தொழில்வாய்ப்பின்மையை இல்லாதொழித்தல் எனும் இலக்குடன ஒரு மில்லியன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளையும் சுயதொழில்வாய்ப்புகளையும் வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களில் இருந்து குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள்.**

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளினுள் அண்ணளவாக 10 இலட்சம் உள்நாட்டு தொழில்வாய்ப்புகளை கீழ்வரும் எட்டு பொருளாதார துறைகளில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான முன் தீர்மானிக்கப்பட்ட கேள்விக்கு அமைவாக மதிப்பீடு செய்யப்பட்டது.

1. விவசாயம், மீன்பிடித்துறை மற்றும் வனவளப் பாதுகாப்பு
2. உற்பத்தித்துறை
3. நிர்மாணிப்பு, அகழ்வு, மின்சாரம், எரிவாயு மற்றும் நீர் விநியோகம்
4. மொத்த வர்த்தகம் மற்றும் சில்லறை வர்த்தகம், மோட்டார் வாகனங்கள் மற்றும் பண்டங்கள்.
5. ஹோட்டல்கள் மற்றும் உணவு விடுதிகள்
6. போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் தொடர்பாடல்
7. நிதி, பெருந்தோட்டம் மற்றும் வியாபாரம்
8. ஏனையவை

தற்போதைய முன்னனுமானிக்கப்பட்ட தொழில்வாய்ப்புகள் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் அடிப்படையில் இருக்கையில், செயற்பாடுகளுக்கு கீழ்வரும் விதப்புரைகளை குழு வழங்கியது.

- ❖ உப துறைகளின் ஊடாக தொழில்வாய்ப்புக்களின் அபிவிருத்தி
- ❖ இந்த தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கு உரிய திட்டங்களை வகுத்தல்
- ❖ வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரச தலையீடு.

9. விவசாயம், தயாரிப்பு, ஹோட்டல்/ உணவுவிடுதிகள், போக்குவரத்து/களஞ்சியப்படுத்தல்/ தொடர்பாடல், நிதி மற்றும் ஏனைய துறைகளின் உற்பத்தித்திறன் அதிகரிக்கின்றது. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஹோட்டல்/ உணவுவிடுதிகள் மற்றும் நிர்மாணிப்பு துறைகள் உயர் வீத பங்களிப்பினை வழங்குகின்றன.

இந்த ‘‘ரக்கிய அருண’’ தொழில்கல்வி ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் பொலொன்னறுவை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் கீழ்வரும் வகையில் நடாத்தப்பட்டது.

இந்த கருத்திட்டத்தின் நோக்கம், தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்களுக்கும் தொழில்பயிற்சி சந்தர்ப்பங்களுக்கும் இடையில் உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கும், பொதுத் துறையில் தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகளை பாடசாலையை விட்டு நீங்கிய பிள்ளைகளின் தொழில் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் ஏற்றவகையில் திட்டங்களை வரைதல் ஆகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் 1500 தொழில் தேடும் மாணவர்கள் பங்குபற்றியதுடன், தேசிய வர்த்தக சம்மேளனத்தின் ஒருங்கிணைப்புடன் அந்த நிறுவனங்களைச் சேர்ந்த 1000 மாணவர்கள் தனியார் துறையில் தொழில்புரிவதற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

**அரச துறையின் வினைத்திறன், செயற்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கு மனிதவள அபிவிருத்தி**

அரச மற்றும் கூட்டுத்தாபனங்களில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுகளின் போது பொருத்தமான நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு சரியான உபாயமார்க்கம் அபிவிருத்தி செய்யப்படவில்லை. இதற்காக எங்கள் சபையினால் வினைத்திறன், செயற்திறன் மற்றும் தரம் அற்ற சேவையை ஊழியர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதை இல்லாதொழிப்பதற்கு, குழு நிபுணர்களின் ஒத்துழைப்புடன் இயலளவு சட்டகம் தயாரிக்கப்பட்டது.

**சிறிய மற்றும் நடுத்தர மட்ட தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டல்**

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டும் நோக்கத்துடன் பொலொன்னறுவை, மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது. இந்நிகழ்ந்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் நிர்வாகம், நிதி முகாமைத்துவம், சந்தையை அடையாளம் காணுதல், முகாமைத்துவப் பிரச்சினைகள் மற்றும் உபாயமார்க்கங்கள் மற்றும் அரச கொள்கைகள் (வரி, கணக்காய்வு மற்றும் பதிவு) தொடர்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் அறிவினை மேம்படுத்தல் ஆகும்.

**மாத்தறை மாவட்டத்தின் அபிவிருத்தித் தேவைகளை அடையாளம் காணுதல்.**

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் இலங்கை மனித வள அபிவிருத்தி சபை மாத்தறை மாவட்டத்தின் அபிவிருத்தி தேவைகளை அடையாளம் காண்பதற்கு 2014 – 2015ம் ஆண்டு காலப்பகுதியில் கற்கைகளை மேற்கொண்டது. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக அந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு ஏற்பட்ட தாக்கங்களை அடையாளம் காணுதல், அந்தப் பிரதேசத்தின் எதிர் சமூக விளைவுகளை அறிதல், அவர்களுடைய சேமிப்புப் பழக்கங்கள் மற்றும் அவர்களுடைய நிதியியல் வசதிகளை தொடர்பான கற்கைகளை மேற்கொள்ளல், அந்தப் பிரதேசத்தில் உள்ள தற்போதைய சுற்றாடல் பிரச்சினைகள் காணமாக அங்கு வாழும் மக்களுக்கு ஏற்பட்ட தாக்கம் என்பவற்றை அறிவதற்கு விசேடமாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆராய்ச்சிகளையும் கற்கைகளையும் மேற்கொண்டு அவர்களின் சமூகத் தேவைக்கு அமைவாக விதப்புரைகளையும் வழங்குதல் எங்கள் சபைக்கு சாட்டப்பட்டுள்ள பிரதான பணியாகும். இந்தக் கற்கையானது தற்போதுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் ஹஹஹஅதிலுள்ள குறைபாடுகளை அடையாளம் கண்டு எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக கொள்கைகளை வகுக்கும் பொழுது அவ்வாறன குறைபாடுகள் ஏற்படுவதைக் குறைப்பதற்கும் பங்களிப்பு செய்கின்றது.

**தொழில் பயிற்சி மற்றும் தொழில் கிடைத்தல் என்பவற்றுக்கு இடையிலான தொடர்புக் கற்கை – மாத்தறை மாவட்டம்.**

அரசாங்கத்தின் அனுசரணை வழங்கப்படும் பயிற்சி நிறுவனங்களினால் பயிற்றப்பட்ட, பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்கள் அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு மூன்று வருட காலப்பகுதியினுள் வெற்றியடைந்தவர்கள், அந்த நிறுவனங்கள் பயிற்சி செயன்முறைகள் மற்றும் அந்த பயிற்சி தொடர்பாக செயற்பாடுகள் இந்த கற்கை மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு குறிப்பிடப்பட்ட முன்மொழிவுகள் மூலம் தொழிற்பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்த இயலும். இது தரமான தொழிற்கல்வியுடன் தொழிற்படையை உருவாக்குவதற்கு உதவும்.

இலங்கையின் மனித வள அபிவிருத்திக்கு வினைத்திறன் மற்றும் செயற்திறன் மிக்க சேவையை வழங்குவதற்காக இலங்கை மனித வள அபிவிருத்தி சபை ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழின் கீழ் செயற்படும் நிறுவனமாக சான்றழிக்கப்பட்டுள்ளது.

தினேஷ் வீரக்கொடி
தலைவர்

## பொருளடக்கம்

1. நிறுவனத்தின் பின்புலம் மற்றும் விடயப்பரப்பு ........................................ 1

2. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு ........................ 4

03. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை – ஒழுங்கமைப்பு கட்டமைப்பு வரைபடம் ........................................ 6

4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையில் பணிபுரியும் ஊழியர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் பதவி ........................................ 7

5. நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்டம் ........................................ 9

5.2 .மாத்தறை மாவட்டத்தின் அபிருத்தித் தேவையைக் கண்டறிதல் ........................................ 12

5.3 தொழில் பயிற்சி மற்றும் தொழிலில் இணைதல் தொடர்பான கற்கை – மாத்தறை மாவட்டம் 14

5.4 “ரக்கியா அருண” தொழில் தகைமை நிகழ்ச்சித்திட்டம் ........................................ 18

5.5 பொதுத்துறையின் செயற்திறன், வினைத்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கு மனிதவள உபாயமார்க்கத்தை அபிவிருத்தி செய்தல் ........................................ 19

5.6 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை பலப்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல் ....... 21

5.8 இலங்கை மனிதவள அபிவிருத்தி மன்றத்தினுள் வினைத்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்தல்.

5.9 பத்திரிகை ........................................ 25

6. 31.12.2015 ம் திகதியன்று நிதிக் கூற்று ........................................ 26

7. 2014 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று ........................ 28

8.2015 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு மாற்றக்கூற்று ........................................ 29

9. 31 டிசம்பர் 2015ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றுதிரட்டிய காசுப் பாச்சல் கூற்று ....... 30

காசுப் பாச்சல் கூற்றின் குறிப்புகள் ........................................ 31

10.குறிப்புகள் ........................................ 32

11.குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் ருக்கம், விளக்கக் குறிப்புகள் ........................ 40

12. கணக்காய்வு அறிக்கை மற்றும் பதில் ........................................ 44

# 1. நிறுவனத்தின் பின்புலம் மற்றும் விடயப்பரப்பு

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை, இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் முக்கிய பணிகளை ஆற்றுவதற்காக 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமாகும் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மனிதவள அபிவிருத்தி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குதல், மனிதவள அபிவிருத்திக்காக கொள்கைகளை உருவாக்குதல், மேம்படுத்துதல், செயற்படுத்துதற்கு உதவிகளை வழங்குதல் போன்ற முக்கிய பணிகளின் பொறுப்பினை வகிக்கின்றது. அதன் பிரதான நோக்கமாக இருப்பது உரிய அமைச்சருக்கும், அரசுக்கும் மனிதவள அபிவிருத்தி தொடர்பான விதப்புரைகளை வழங்கும் உயர் மட்ட நிறுவனமாக செயற்படுதல் ஆகும்.

## 1.2 நிறுவன அறிமுகம்

தேசிய மட்டத்திலான ஆலோசனை சபையாக 1987ம் ஆண்டு ஜூன் மாதம் 05ம் திகதி இலங்கை தேசிய மனிதவள சபை ஆரம்பமானது, இளைஞர் விவகார அமைச்சின் ஓர் அலகாகவாகும். அதன் பின்னர் 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் ஊடாக சுயாதீனமாக தொழில்முயற்சியாண்மை சபையாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் நிறுவப்பட்டது. அன்றிலிருந்து குறுகிய காலத்தினுள், அதாவது 2000ம் ஆண்டு இந்த நிறுவுனம் கைத்தொழில் கல்வி மற்றும் தொழில் அமைச்சின் கீழ் சாட்டப்பட்டதுடன், 2001ம் ஆண்டு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை கல்வி மற்றும் காலாச்சார அமைச்சின் கீழ் சாட்டப்பட்டது. அதன் பின்னர் மீண்டும் அரசு மாற்றமடைந்ததும் இந்த நிறுவனம் திறன் அபிவிருத்தி, தொழில் மற்றும் கைத்தொழில் பயிற்சி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. இவ்வாறு குறுகிய காலத்தினுள் பல்வேறுபட்ட அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்த இந்த நிறுவனம் தற்போது கொள்கைத் திட்டமிடல், பொருளாதார நடவடிக்கை, சிறுவர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

## 1.3 தொலைநோக்கு

துூரநோக்கு ஏங்களது எதிர்கால தொழில்படை தயாா

## 1.4 நோக்கம்

அபிவிருத்தி, அமுல்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் பயனுள்ள கொள்கைகளை சதிப்படுத்துவதோடு புதுமையான உத்திகளை கையாண்டு எமது நாட்டின் மனிதவளத்தினை அபிவிருத்தி செய்தலாகும்.

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் நோக்கமான அரசுக்கு மனிதவளத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்குவதற்கான நிறுவனச் சட்டகத்தை உருவாக்குதல். மனிதவள அபிவிருத்தி கொள்கை செயற்பாட்டுத் திட்டம், கொள்கை மீளாய்வு மற்றும் மனிதவள பிரிவின் வளர்ச்சி போன்ற பிரிவுகள் தொடர்பாக இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை பொறுப்பினை வகிக்கும். சபையின் சட்டத்திறகு அமைவாக சபையின் பணிகள் கீழ்வருமாறு அமைகின்றது.

1. (அ) தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி
   (ஆ) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்
   (இ) வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தல்
   (ஈ) பாதிக்கப்பட்ட குடும்பக் குழுக்களுக்கு சமூகப் பாதுகாப்பைத் திட்டமிடுதல் மற்றும்
   (உ) பொருளாதார மீள்கட்டமைப்பு மூலம் உரிமைகளைப் பொற்றுக்கொடுத்தல் தொடர்பாக அல்லது மனித வளத் தொகுதியை நியாயப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் உட்பட தேசிய மனிதவள கொள்கையின் அனைத்துப் பிரிவுகள் தொடர்பாகவும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.
2. தேசிய கொள்கைக்கு அமைவாக மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை அரசுக்கு சமர்ப்பிப்பதற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு விதப்புரையை வழங்குதல்.
3. தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் செயற்படுத்தப்படும் திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்தல் மற்றும் பரீசீலித்துப்பார்த்தல் மற்றும் தேவையாயின், அக்கொள்கைகளுக்கு திட்டங்களுக்கு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு செய்யவேண்டிய மாற்றங்களை அமைச்சருக்கு விதப்புரை செய்தல்.
4. அரசினால் அனுமதியளிக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுவமை ஆராய்ந்து பார்த்தல்.
5. இந்த சட்டத்தின் உபஅட்டவணையில் குறிப்பிடப்பட்ட யாதேனும் வியம் தொடர்பாக யாதேனும் கருத்திட்டங்களை செயற்படுத்தல். அவ்வாறு இருந்த போதிலும் கருத்திட்டம் வேறுயாதேனும் அமைச்சருக்கு சாட்டப்பட்ட யாதேனும் விடயம் தொடர்பாக இருக்குமாயின், அதனை செயற்படுத்தல் என்பது அந்த அமைச்சரின் சம்மதத்துடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும்
6. தேசிய நோக்கத்திற்கு அமைவாக மனிதவளத்தை அபிவிருத்தி செய்வதற்கு அவசியம் எனக் கருதும் நன்மைகள் அல்லது பின்னர் பலன்தரக்கூடியவை என அனைத்தையும் செயற்படுத்தல்.

## 1.5 சபைக்கு உள்ள அதிகாரங்கள்

1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 (2)(1)ம் உபபந்தியின் கீழ் சபைக்குரிய அதிகாரங்கள் இவையாகும்.

(அ) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான ஆய்வுகள், விசாரணைகள், கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

(ஆ) மனிதவள அபிவிருத்திக்குரிய விடயங்கள் தொடர்பாக நிபுணர்களின், தொழில்சார்ந்தவர்களின் அல்லது மக்களின் கருத்தினை அறிந்து கொள்வதற்கு வெளிப்படையாக அல்லது தனிப்பட்ட ரீதியில் விடங்களை கேட்டறிதல்.

(இ) சபையினால் நிறைவேற்றப்படும் பணிகளுக்கு சமமான பணிகளை இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் என்பவற்றுடன் தொடர்புகளைப் பேணுதல்.

(ஈ) இந்த சட்டத்தின் கீழ் சபையின் பணிகளை மேற்கொள்வதற்கு அவசியமான அனைத்து ஒப்பந்தகங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு வருதல் மற்றும் அவற்றினை நிறைவேற்றுதல்.

(உ) இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்கள் அல்லது தனிப்பட்ட நபர்களின் ஊடாக மனிதவள அபிவிருத்தி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

(ஊ) மனிதவள அபிவிருத்தி மற்றும் அதற்குரிய விடயங்கள் தொடர்பான தகவல் தரவு வங்கியொன்றினை நிறுவி அதனைப் பேணுதல்.

(எ) ஏதேனும் வங்கி அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்பு கணக்குகளை உருவாக்கி அவற்றைப் பேணுதல்.

(ஏ) அசையும் மற்றும் அசையா இருவகை நன்கொடை மற்றும் நிவாரணங்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்.

(ஐ) மனித வள அபிவிருத்தியில் பல்வேறுபட்ட பிரிவுகளில் திறன் நிபுணத்துவ ஒதுக்கொன்றினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தினைக் கொண்டு சபை அலுவலர்களின் திறமையை மேம்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஒ) சபையின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அவசியமான குழு நிபுணத்துவக் குழு மற்றும் ஆலோசனைச் சபை என்பவற்றை நிறுவுதல்.

(ஓ) அமைச்சுகளில், அரச திணைக்களங்களில், அரச கூட்டுத்தாபனங்களில், சட்டபூர்வ சபைகளில், மாகாண சபைகளில், உள்ளூராட்சி நிறுவனங்களில் மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் தரவுகள் உட்பட சபையினால் அவசியம் எனக் கருதப்படும் தகவல்களை கோருதல் மற்றும் அவற்றினை பெற்றுக்கொள்ளுதல்.

(ஔ) சபையின் பணி அதிகாரங்கள் மற்றும் பணியினை நிறைவேற்றுதல் என்பவற்றை செயற்படுத்துதல் மற்றும் செயற்படுத்துவதற்கு அவசியம் என எண்ணும் நன்மையானது அல்லது பின்னர் பலன்தரக்கூடியது எனும் அனைத்தையும் செயற்படுத்தல்.

## 2. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு அமைச்சின் கீழ் செயற்படும் இந்த சபை 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறுவப்பட்ட தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் என்பவர்கள் உள்ளடங்களாக 20 நபர்களைக் கொண்டு அமைந்துள்ளது. இதில் 15 பேர் உத்தியோகபூர்வ அதிகாரத்துடனும் உரிய நிறுவனங்களில் இருந்து 5 பேராகவும் நியமிக்கப்படுவர். இதைவிட உரிய துறையில் முன்னனுபவம் மற்றும் திறமை என்வற்றை கருத்தில் கொண்டு 5பேர் நியமிக்கப்படுவதுடன், இதில் இருவர் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவராவர். சபை அங்கத்தவர்களில் ஒருவரை நிறைவேற்றுத் தலைவராக பெயரிடுவதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு பிரதான நிறைவேற்று அலுவலர் சபையின் தலைவராவார். சுபை 31.12.2015ம் திகதி 19 அங்கத்தவர்களை கொண்டமைந்திருந்தது.

2015ம் ஆண்டு சபையின் பணிப்பாளர் சபை கீழ்வரும் அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

<u>சட்டத்தின் 3(1)(அ) வில் இருந்து (வ) வரையிலான பந்தியின் கீழ் நியமனங்கள்</u>

1. தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை
2. செயலாளர்இ தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு
3. செயவாளர் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு
4. செயலாளர் , கல்வி அமைச்சு
5. செயலாளர் விஞ்ஞான , தொழிநுற்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு
6. செயலாளர், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு
7. செயலாளர், பொதுநிர்வாகம் மற்றும் பொதுமுகாமைத்துவ அமைச்சு
8. செயலாளர், சுகாதார போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
9. செயலாளர் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
10. செயலாளர், நீர்ப்பாசனம் மற்றும் விவசாய அமைச்சு
11. தலைவர், மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு
12. பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு
13. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
14. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
15. தலைவர், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
16. செயலாளர், நிதிஅமைச்சு


**சட்டத்தின் 3(2)(ஐ) பந்தியின் கீழ் நியமனங்கள்**

1. பேராசிரியர். குமென்னா குனரத்ன, பீடாதிபதி, மனித நேயங்கள் மற்றும் சமூக விஞ்ஞான பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
2. கலாநிதி. ரங்ஹிக ஹல்வத்துர, முதுநிலை விரிவுரையாளர், மொறட்டுவ பல்கலைக்கழகம்.
3. கலாநிதி. ரனில் அபேசிங் , 178, ஜோர்ஜ் ஆர்.டீ.சில்வா மாவத்தை, கண்டி.

**2015ம் ஆண்டு இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் நிர்வாகக் குழுக் கூட்டம் மற்றும் நடத்தப்பட்ட தினங்கள் மற்றும் பங்குபற்றிய அங்கத்தவர்களின் விபரங்கள்**

| தொடர் இலக்கம் | நிர்வாக சபையின் அங்கத்தவர்களின் பெயர் | 21.04.2015 | 10.06.2015 |
|---|---|---|---|
| 01 | தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை | √ | √ |
| 02. | செயலாளர்இ தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு | √ | - |
| 03. | செயவாளர் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு | √ | √ |
| 04. | செயலாளர், கல்வி அமைச்சு | - | - |
| 05. | செயலாளர் விஞ்ஞான , தொழிநுப்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | - | - |
| 06. | செயலாளர், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | - | √ |
| 07. | செயலாளர், பொதுநிர்வாகம் மற்றும் பொதுமுகாமைத்துவ அமைச்சு | - | √ |
| 08. | செயலாளர், சுகாதார போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு | - | √ |
| 09. | செயலாளர் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு | √ | - |
| 10. | செயலாளர், நீர்ப்பாசனம் மற்றும் விவசாய அமைச்சு | - | - |
| 11. | தலைவர், மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு | - | - |
| 12. | பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு | √ | √ |
| 13. | தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு | √ | √ |
| 14. | தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | - | - |
| 15. | தலைவர், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை | - | √ |
| 16. | செயலாளர், நிதிஅமைச்சு | √ | √ |
| 17. | பேராசிரியர். குமென்னா குனரத்ன | √ | - |
| 18. | கலாநிதி. ரங்ஹிக ஹல்வத்துர | √ | √ |
| 19· | கலாநிதி. ரனில் அபேசிங் | √ | √ |

## 03. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை – ஒழுங்கமைப்பு கட்டமைப்பு வரைபடம்



## 4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையில் பணிபுரியும் ஊழியர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் பதவி

| பதவிப் பெயர் | அனுமதி வழங்கப்பட்ட பதவியணி | 31.12.2015 திகதியன்று சேவையில் இருந்த ஊழியர்களின் எண்ணிக்கை | 31.12.2015 திகதியன்று வெற்றிடம் | பெயர் |
|---|---|---|---|---|
| தலைவர் | 01 | 01 | - | திரு.தினேஸ் வீரக்கொடி |
| பணிப்பாளர் | 01 | 01 | - | திரு கே ஏ லலிததீர |
| உதவிப் பணிப்பாளர் | 03 | 03 | - | திரு எச் தியாகசீலன்<br>திரு யு.எஸ்.டி. விதானகே<br>திருமதி ஜே.ஏ.சி.ஜி.ஜயசிங்க |
| சபைத் தலைவர் /சட்ட அலுவலர் | 01 | 01 | - | செல்வி ஜி.ஜி.கயுனி உப்பலா |
| ஆராய்ச்சி அலுவலர் | 04 | 04 | 01 | திருமதி ஆர்.எம்.ஏ.யு.கே. இரத்னாயக்க<br>திருமதி ஏ.எச்.டி.சி. பெரேரா<br>திரு டி செந்தில்நாதன்<br>செல்வி. நலோதா எதிரிசிங்க |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | - | |
| மொழிபெயர்ப்பாளர் | 01 | - | 01 | - |
| அபிவிருத்தி அலுவலர் | 04 | 04 | - | திருமதி பீ.ஈ.எஸ். சேனாரத்ன த சில்வா<br>திரு ஆர்.டி.சி.எஸ் ராஜபக்ச<br>திரு.கே.பி.ஜி.பெரேரா<br>செல்வி.சீ.குணசிங்க |
| தலைவரின் தனிப்பட்ட உதவியாளர் | 01 | 01 | - | செல்வி நாளிகா இரத்நாயக்க |
| முகாமைத்துவ உதவியாளர் | 08 | 06 | 02 | திருமதி சாமினி காரியவாசம்<br>திரு.சி.ஆர்.மத்தகே<br>செல்வி.எம்.ஜி.என்.தில்ஹாரி<br>திரு.டபில்யூ.எம்.லக்சித ரஜித்<br>செல்வி கே சி முத்துமால<br>செல்வி ஜி.ஜி.எம்.சத்தாமங்களா<br>செல்வி. ஆஷா சுரேணி எதிரிசிங்க |
| சாரதி | 04 | 04 | - | திரு.ஜி.எம். பின்னதுாவ<br>திரு.டபில்யூ.எச்.ஈ. ஜயரத்ன<br>திரு.டபில்யூ.டெரன்ஸ் பியல்<br>திரு டி.எச.டபல்யூ. அசங்க லக்மால் |
| அலுவலக உதவியாளர் | 04 | 03 | 01 | திரு என்.ஜி.நதுன் மதுரங்க<br>திரு.டபில்யூ.ஆர்.ஏ பிரின்ஸ் கிரான்வில்<br>செல்வி ஏ நயனா பிரியதர்சனி |
| **மொத்த எண்ணிக்கை** | **33** | **28** | **05** | |

அனுமதியளிக்கப்பட்ட பதவியணியில் காணப்பட்ட கீழ்வரும் வெற்றிடங்களுக்கு பொத்தமான ஊமியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பபட்டனர்.

**புதிய ஆட்சேர்ப்பு**

| பெயர் | பதவி | ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதி |
|---|---|---|
| 1. திரு.தினேஸ் வீரக்கொடி | தலைவர் | 2015.02.26 |
| 2. செல்வி. நலோதா எதிரிசிங்க | ஆராய்ச்சி அலுவலர் | 2015.10.21 |

**ஊழியர்கள் சேவையிலிருந்து விலகல்**

| பெயர் | பதவி | சேவையிலிருந்து விலகிய தினம் |
|---|---|---|
| 1. திரு விஜய விக்ரமரத்ன | தலைவர் | 2015.01.23 |

## 5. நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்டம்

**100 நாட்கள் நிகழ்ச்சித்திட்டம்**

புதிய அரசாங்கத்தினால் அமுல்செய்யப்பட்ட 100 நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள கீழே இலக்கம் 31, 55 மற்றும் 58 இன் கீழ் குறிப்பிடப்பட்ட இலக்குகளை பூர்த்திசெய்வதற்கு அவசியமான விதப்புரைகள் பிரபல்யமான நிபுணர்களை உள்ளடக்கிய குழுவின் ஊடாக இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை அவசியமான கொள்கைத் தீர்மானங்களை மேற்கொண்டது.

31. இளைஞர்களை அமைதியின்மைப்படுத்துவதற்கு காரணமான தொழில்வாய்ப்பின்மையை இல்லாதொழித்தல் எனும் இலக்குடன் ஒரு மில்லியன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளையும் சுயதொழில்வாய்ப்புகளையும் வழங்குவதற்கு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

55. வருடத்தினுள் மொத்த தேசிய உற்பத்தியில் இருந்து கல்விக்கான ஏற்பாடுகளை 1.5% வீதத்திலிருந்து 6% வீதத்திற்கு அதிகரித்தல்.

58. உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் உயர் டிப்ளோமா அல்லது பட்டப் படிப்பைத் தொடர்வதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

புதிய அரசாங்கத்தினால் அமுல்செய்யப்பட்ட 100 நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள கீழே இலக்கம் 58 இன் கீழ் குறிப்பிடப்பட்ட உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் உயர் டிப்ளோமா அல்லது பட்டப் படிப்பைத் தொடர்வதற்கு சந்தர்ப்பங்களை வழங்குதல் தொடர்பாக நடாத்தப்பட்ட செயலமர்வுகளின் ஊடாக கீழ்வரும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டது. உள்நாட்டு பல்கலைக்கழகங்களுக்கு தகைமைபெற்றவர்களை சேர்த்துக்கொள்ளும் எண்ணிக்கையை அதிகரித்தல்.

1. அரச கல்வி நிறுவனங்களில் மூன்றாம் நிலைக் கல்வியைக் கற்பதற்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தல்.
2. மூன்றாம் நிலைக் கல்வியை வழங்கும் தனியார் நிறுவனங்களை ஒன்றிணைத்தல்

85இலக்கம் 55 இன் கீழ், 5 வருடத்தினுள் மொத்த தேசிய உற்பத்தியில் இருந்து கல்விக்கான ஏற்பாடுகளை 1.5% வீதத்திலிருந்து 6% வீதத்திற்கு **அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களில் இருந்து குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள்**.

ஆரம்ப, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி மற்றும் உயர் கல்விகளுக்கு முறையே தலைமை வகிக்கும் பேராசிரியர் திருமதி மேரி பீரிஸ், பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக, பேராசிரியர் மலிக் ரணசிங்க மற்றும் பேராசிரியர் பி.எஸ்.எம் குணரத்ன அவர்களைக் கொண்ட குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட குழுக் கலந்துரையாடல்களில் இருந்து கல்விக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தினை 1.5% வீதத்திலிருந்து 6% வீதத்திற்கு அதிகரிப்பதற்கு கீழ்வரும் விதப்புரைகள் வழங்கப்பட்டது.

**கல்வி அமைச்சின் கீழ் சாட்டுதல் மற்றும் உரிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.**

1. மனநிலை அல்லது சமூகப் பிரச்சினைகளைக் கொண்ட மற்றும் அங்கவீனமுற்ற விசேட தேவைகளுக்குட்பட்டவர்கள் மீது அதிக கவனத்தை செலுத்துதல்.
2. உயர் தரத்தில் விஞ்ஞானத்துறையில் கல்வி கற்பிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கையை 900 இருந்து 1500 ஆகவும் தொழில்நுட்ப துறை பாடசாலைகளின் எண்ணிக்கையை 250 இருந்து 100 ஆகவும் அதிகரித்தல்.
3. அவர்களின் திறமையின் அடிப்படையில் ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பினை வழங்குதல்.
4. கல்வித்துறையில் அதிக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு தேசிய கல்வி நிறுவனத்திற்கு ஒதுக்கப்படும் வருடாந்த ஒதுக்கீட்டை அதிகரித்தல்.
5. அவர்களின் விருப்பத்துடன் எந்தத்துறையிலும் மூன்றாம் நிலை அல்லது தொழில்கல்வியை கற்கும் மாணவர்களுக்கு வவுச்சர் முறைமையின் ஊடாக அவர்களுடைய உயர் கல்வி செலவுகளை பூர்த்திசெய்வதற்கு தகைமைபெற்ற மாணவர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குதல்.
6. தனியார் பல்கலைக்கழகங்களுக்கு சமமாக உயர் தரப் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றதில் இருந்து குறைந்தது 6 மாதங்களினுள் அரச பல்கலைக்கழக அனுமதியை வழங்குதல்.
7. 17% வீதத்திலிருந்து 25% வீதமாக உயர் கல்விக்கான ஆட்சேர்ப்பு எண்ணிக்கையை அதிகரித்தல்.
8. சர்வதேச தொழில் மற்றும் மாநாடுகளில் பங்குபற்றுவதற்கும் பட்டப்பின்படிப்பினை மேற்கொள்வதற்கும் அரச அனுசரணையை பல்கலைக்கழக ஊழியர்களை வலுவூட்டுவதற்காக வழங்குதல்.
9. உள்நாட்டு பல்கலைக்கழகங்களினால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு 3 – 6 மாதம் வரையிலான சர்வதேச புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொள்வதற்கான அணுகலை வழங்குதல்.

10. சர்வதேச மற்றும் வெளிநாட்டிலிருந்து வருகை தரும் மேற்பார்வையாளர்கள் ஊடாக உயர் கல்வியின் தரத்தினை சான்றழித்தல் மற்றும் உறுதிப்படுத்தல்.

31. **இளைஞர்களை அமைதியின்மைப்படுத்துவதற்கு காரணமான தொழில்வாய்ப்பின்மையை இல்லாதொழித்தல் எனும் இலக்குடன் ஒரு மில்லியன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளையும் சுயதொழில்வாய்ப்புகளையும் வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களில் இருந்து குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள்.**

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளினுள் அண்ணளவாக ஒரு மில்லியன் உள்நாட்டு தொழில்வாய்ப்புகளை கீழ்வரும் எட்டு பொருளாதார துறைகளில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான முன் தீர்மானிக்கப்பட்ட கேள்விக்கு அமைவாக மதிப்பீடு செய்யப்பட்டது.

1. விவசாயம், மீன்பிடித்துறை மற்றும் வனவளப் பாதுகாப்பு
2. உற்பத்தித்துறை
3. நிர்மாணிப்பு, அகழ்வு, மின்சாரம், எரிவாயு மற்றும் நீர் விநியோகம்
4. மொத்த வர்த்தகம் மற்றும் சில்லறை வர்த்தகம், மோட்டார் வாகனங்கள் மற்றும் பண்டங்கள்.
5. ஹோட்டல்கள் மற்றும் உணவு விடுதிகள்
6. போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் தொடர்பாடல்
7. நிதி, பெருந்தோட்டம் மற்றும் வியாபாரம்
8. ஏனையவை

தற்போதைய முன்னனுமானிக்கப்பட்ட தொழில்வாய்ப்புகள் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் அடிப்படையில் இருக்கையில், செயற்பாடுகளுக்கு கீழ்வரும் விதப்புரைகளை குழு வழங்கியது.

- ❖ உப துறையின் ஊடாக தொழில்வாய்ப்புகளின் அபிவிருத்தி
- ❖ இந்த தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கு உரிய திட்டங்களை வகுத்தல்
- ❖ வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரச தலையீடு.

விவசாயம், தயாரிப்பு, ஹொட்டல்/ உணவுவிடுதிகள், போக்குவரத்து /களஞ்சியப்படுத்தல் /தொடர்பாடல், நிதி மற்றும் ஏனைய துறைகளின் உற்பத்தித்திறன் அதிகரிக்கின்றது. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஹோட்டல்/ உணவுவிடுதிகள் மற்றும் நிர்மாணிப்பு துறைகள் உயர் வீத பங்களிப்பினை வழங்குகின்றன.

## 5.2 .மாத்தறை மாவட்டத்தின் அபிருத்தித் தேவையைக் கண்டறிதல்

மனிதர்களின் தற்போதைய நிலைத்திருப்புக்கு மட்டுமல்லாது எதிர்கால அபிவிருத்திக்கு தாக்கத்தை வழங்கும் பிரதான எண்ணக்கருவாக அபிவிருத்தி உள்ளதென்பதை முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஒரு நாடு பொருளாதார அபிவிருத்தியை அடைவதனால் மட்டும் நாடு அபிவிருத்தி அடைந்து விட்டது என அர்த்தம் கொள்ளக்கூடாது. கிடைக்கும் பொருளாதார அபிவிருத்தியின் நன்மைகள் அனைத்து மக்களினதும் கைகளிலும் கிடைத்திருக்குமாயின், சமமின்மை குறைவடையுமாயின் நாடு அபிவிருத்தி அடைந்துள்ளது எனக் கருத முடியும். அதனால் இந்த அபிவிருத்தி எண்ணக்கரு தொடர்பாக பல்வேறுபட்ட ஆராய்ச்சி மற்றும் கற்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும்.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் கீழ் இருக்கும் நிறுவனமாக இலங்கை மனித வள அபிவிருத்தி சபை 2014 – 2015ம் ஆண்டுகளில் மாத்தறை மாவட்டத்தின் அபிவிருத்தித் தேவையை கண்டறிவதற்காக கற்கையொன்றினை மேற்கொண்டது. விசேடமாக இந்த கற்கையின் மூலம் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களின் மூலம் மக்களுக்கு ஏற்பட்ட தாங்கங்களை கண்டறிந்து, பிரதேசத்தில் நிகழும் சமூக விரோத செயற்பாடுகளின் அளவைக் கண்டறிந்து, இந்த பிரதேசத்தில் வாழும் மக்களின் நிதி வசதி மற்றும் சேமிப்பு தொடர்பாக கற்கை செய்து, பிரதேசத்தின் சுற்றாடல் பாதிப்பு காரணமாக மனித வாழ்க்கைக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள் எவை எனக் கண்டறிதல் இந்த கருத்திட்டத்தின் கற்கை மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த கற்கைக்காக மாத்தறை மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகத்தின் கிராமிய, நகர மற்றும் தோட்டப் பிரதேசங்களில் உள்ள அனைத்து மக்களும் பிரநிதித்துவம் வகிக்கும் வகையில் 3000 வீட்டு அலகுகளில் இருந்து கட்சி சார்பின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், Two phase Sampling Technique ஊடாக பதிலளிப்பை மேற்கொண்ட 2111 வீட்டு அலகினைச் சேர்ந்தவர்கள் கற்கைக்காக பயன்படுத்தப்பட்டனர்.

இந்த நோக்கத்தினை அடைவதற்காக தரவு சேகரிப்பதற்கு கேள்விக்கொத்து முறை பயன்படுத்தப்பட்டது. விசேடமாக இந்த கேள்விக்கொத்தைத் தயாரிப்பதற்கு மாத்தறை மாவட்டத்தின் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார மற்றும் கல்வித் துறைகளில் தற்போது காணப்படும் பிரச்சினைகளைக் கண்டறிவதற்காக அந்த துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச சேவையாளர்களின் பங்களிப்புடன் 10.11.2014 மற்றும் 11.11.2014ம் திகதிகளில் இரு நாள் செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டது. அதன்போது அந்த முக்கிய சபையின் கருத்துக்கள் பெறப்பட்டு தயாரிக்கப்பட்ட கேள்விகொத்தைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சியொன்று 30 கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம சேவையாளர்களுக்கு நடாத்தப்பட்டது. அத்துடன்

கேள்விக்கொத்தின் ஊடாகப் பெறப்பட்ட பிரதான தரவுகள் மாத்தறை மாவட்டத்தின் பொருளாதார, சமூக, சுற்றாடல் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான அலுவலர்கள், மாத்தறை மாவட்டத்தின் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் உதவித் திட்டமிடல் அலுவலர்கள், மாத்தறை மாவட்டத்தின் புள்ளிவிபரவியல் அலுவலர் என்பவர்களுடன் கலந்துரையாடப்பட்டு, இந்த கற்கைக்கு அவசியமான இரண்டாம் நிலை தரவுகள் சேகரிக்கப்பட்டது.

சேகரிக்கப்பட்ட பிரதான மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதன் மூலம் அடையாளம் காணப்பட்டது என்னவெனில், இந்த பிரதேசத்தின் பெரும்பான்மையான குடும்பத்தர்கள் இரண்டாம் நிலைக் கல்வியைக் பெற்றிருப்பதுடன், குறிப்பிடக்கூடிய பெரும்பான்மையினருக்கு நிலையான தொழில் தேவை இல்லாதிருப்பதுடன், நிரந்தர தொழில் இல்லாத பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையை விட அதிகம் என்பதாகும். அதேபோல், இந்த பிரதேசத்தின் மக்கள் அதிகமான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு சாத்தியமல்லாத மக்களாக இருப்பதனால், மக்கள் அதிகமாக ஏதோ ஒரு வகையில் கடன் பெற்றுக்கொள்வதற்கு முற்பட்டுள்ளனர் என்பதாகும். அதேபோல், மக்கள் குறைந்தபட்சம் முறைசார கடன்களில் ஈடுபட்டுள்ளதனால், அதன் மூலம் அவர்கள் கிராமியக் கடன் முறைக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் மிக அரிது என்பது இந்த கற்கையின் மூலம் தெரிய வந்துள்ளது.

அதேபோல் மாத்தறை மாவட்டத்தினுள் கொலை மற்றும் கலவரம், கொள்ளை / வழிப்பறி போன்ற கடுமையான குற்றச்செயல்கள் குறைந்த மட்டத்தில் காணப்படுவதனால் மதுபான மற்றும் புகைப்பிடித்தல் பாவனை உயர் மட்டத்தில் காணப்படுகின்றது.

பிரதேசத்தில் நிலவும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அபிவிருத்திகளுக்கிடையில் வீட்டு அபிவிருத்தி, பொதுப் போக்குவரத்து சேவையான பஸ் சேவை, பொதுக் கிணறு / விசாயக் கிணறு /குழாய்க் கிணறு பெற்றுக்கொடுக்கும் கருத்திட்டம், விவசாய அபிவிருத்தி மற்றும் அது தொடர்பான கருத்திட்டம், கைத்தொழில் அபிவிருத்தி கருத்திட்டம் மற்றும் தொழில் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் குறிப்பிடக்கூடிய அளவில் இல்லாததுடன், பாடசாலைக் கல்வி மற்றும் அது தொடர்பான கருத்திட்டம், மின்சாரம் வழங்கல் கருத்திட்டம், வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் திவிநகும / சமுர்த்தி போன்ற கருத்திட்டங்கள் சிறந்த மட்டத்தில் உள்ளதனால், தொழில் கல்வி கருத்திட்டம் தொடர்பாக கவனத்தில் கொள்கையில் அந்த கருத்திட்டத்தில் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாக இருப்பதுடன் கருத்திட்ட பயிற்சிகளைப் பெற்றுக்கொண்ட தரப்பினர்களிடையில் அது தொடர்பாக நல்லெண்ணம் இருப்பதுடன், பாரிய கருத்திட்டங்களின் இடையில் கருத்திட்டம் தொடர்பாக மக்களின் மதிப்பீடு தொடர்பாக பார்த்தால் இந்த கருத்திட்டம் சாதார மட்டத்தில் விளைவுகளை வழங்கிய கருத்திட்டமாகவும், மாத்தறை கதிர்காமம் புகையிரதப் பாதைக் கருத்திட்டம் மற்றும்

கொழும்பு மாத்தறை அதிவேக வீதி கருத்திட்டம் குறிப்பிடக்கூடியளவு இருப்பதாக மக்களின் மதிப்பீடு இந்த கற்கை மூலம் தெளிவானது.

அத்துடன் மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தைக் கொடுக்கும் விலங்குகளிடையில் மயில், குரங்கு மற்றும் காட் என்பவை முக்கிய இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளன என்பது மாத்தளை மக்களின் பதிலளிப்பில் இருந்து தெளிவாகியுள்ளது.

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபைக்கு சாட்டப்பட்டுள்ள பிரதான பணி, சமூகத் தேவைக்கு அமைவாக ஆராய்ச்சி மற்றும் கற்கைகளை மேற்கொள்வதன் ஊடாக உரிய விதப்புரையைப் பெற்றுக்கொடுத்தலாகும். அந்தப் பணிக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட இந்த மாத்தறை மாவட்டக் கற்கையின் மூலம் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக கொள்கைகளை வகுப்பதற்கு பங்களிப்பு செய்ய முடியும். அது எவ்வாறு இருப்பினும், இக்கற்கை தற்போது செயற்படும் கருத்திட்டங்களின் செயற்திறனை அதிகரிப்பதற்கும், அவற்றில் காணப்படும் குறைபாடுகளை அடையாளம் காண்பதற்கும், அக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் உதவும் என்பதில் ஐயமில்லை.

## 5.3 தொழில் பயிற்சி மற்றும் தொழிலில் இணைதல் தொடர்பான கற்கை – மாத்தறை மாவட்டம்

இலங்கையில் இளைஞர் சமூகத்திற்கு தொழில் பயிற்சியை வழங்குவதற்கு அரச அலகின் ஊடாக பல்வேறுபட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த தொழில் பயிற்சி வழங்கப்படுவது பயிற்சியாளர்களின் தொழில் முன்னேற்றம், அவர்களின் வாழ்க்கை மேன்மைக்காக வழங்கப்படுகின்றது. உண்மையில் இதற்குரிய தரம் மற்றும் தகுதி இல்லாதுவிடின், தரமான தொழில் பாடநெறிகளை வழங்குவது எவ்வாறு என கண்டறிதல் முக்கியமானதாகும்.

மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள பயிற்சி நிறுவனங்களில் பயிற்சியைப் பெற்றுக்கொண்டவர்களை இலக்காக் கொண்டு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை நிழல் கற்கையொன்றை மேற்கொண்டதுடன், தொழில்பயிற்சி நிறுவனங்களில் மூன்று வருடங்களுக்கு முன்னர் தொழில் பயிற்சியைப் பெற்றுக்கொண்டவர்கள் மூன்று வருடங்களின் பின்னர் அதன் மூலம் என்ன பயனைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள் எனவும், அதேபோல் நிறுவனங்களின் பயிற்சி நடவடிக்கைகள், அது தொடர்பான ஏனைய செயற்பாடுகள் தொடர்பாகவும் கற்கையை மேற்கொண்டது.
இந்த கற்கை ஆராய்ச்சி கற்கையாக மேற்கொள்ளப்பட்டது. இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை மாத்தறை மாவட்டத்தின் தொழில்பயிற்சி நிறுவனமான தொழில் பயிற்சி அதிகாரசபை (VTA), தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (NYSC), கைத்தொழில் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் (DTET), தேசிய தொழில் பயிலுனர் தொழில்நுட்ப

பயிற்சி அதிகாரசபை (NAITA) போன்ற நிறுவனங்களில் 2011, 2012ம் ஆண்டுகளில் பாடநெறிகளைப் பயின்றவர்கள் இந்த கற்கைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர். 4881 பயிற்சியாளர்களில் 3000 பேர் ஆய்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டு தபால் மூலம் கேள்விக்கொத்து அவர்களுக்கு அனுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த 536 மாணவர்கள் மாதிரியாக தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த கற்கைக்கு பயன்படுத்தப்பட்டனர்.

இந்த கற்கையின் மூலம் தெளிவான விடயங்கள் பல உள்ளன. பயிற்சி பெற்றவர்களில் பெரும்பான்மையானோர் பெண்களாக இருப்பதுடன் ஆண்களின் பங்களிப்பு குறைவாக உள்ளது. இதில் பெண்களின் பங்கு 60.4% வீதமாகவும் ஆண்களின் பங்கு 39.6% வீதமாகவும் உள்ளது. பெண்கள் தொழில்பயிற்சிக்கு வருவதென்பது அபிவிருத்தி அடைந்து வரும் நாடான இலங்கைக்கு சிறந்ததொரு விடயமாகும்.

மூன்றாம் நிலை தொழில் கல்வி ஆணைக்குழுவினால் 2011 மற்றும் 2012ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட உழைப்புச் சந்தை சஞ்சிகைகளில் உள்ளவாறு பாடநெறிகளைப் பூர்த்திசெய்தவர்களில் பெரும்பான்மையானோர் ஆண்களாவர். 2011ம் ஆண்டு தேசிய மட்டத்தில் தொழில் பயிற்சி அதிகாரசபை (VTA), தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (NYSC), கைத்தொழில் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் (DTET), தேசிய தொழில் பயிலுனர் தொழில்நுட்ப பயிறசி அதிகாரசபை (NAITA) போன்ற நிறுவனங்களில் இருந்து 30582 (54%) ஆண்களும் 23368 (46%) பெண்களும் மேற்குறித்த 4 நிறுவனங்களின் ஊடாக பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்துள்ளனர். (TVEC, Labour Market Information Bulletin, 2012)


எனினும் எங்களால் மாத்தறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி ஆய்வில் அதிகமாக பயிற்சி பெற்றவர்கள் பெண்களாக இருப்பதுடன், ஒப்பீட்டளவில் ஆண்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது.

பயிற்சி பெற்றவர்களில் கல்வி மட்டத்தில் குறிப்பிட்டளவு நல்ல நிலையில் உள்ளனர். மேற்குறிப்பிட்ட வீதத்தில் மூன்றாம் நிலைக் கல்வியைப் பெற்றிருப்பது விசேடமானதாகும். மாணவர்கள் பயிற்சிப் பாடநெறிகளுக்கு செல்வதற்கு பிரபல்யமான முறையாக அமைந்திருப்பது கடந்த காலங்களில் பயிற்சியைப் பெற்ற நண்பர்கள் ஊடாக அறிவைப் பெற்றுக்கொள்ளலாகும். இதில் 32% வீதத்தினர் தாம் கற்ற பாடநெறி தொடர்பாக சிறந்த எண்ணத்தைக் கொண்டிருப்பதை அறிந்துகொண்டது மிக முக்கியமானதாகும்.

அவசியமான பயிற்சி மூலத்தைப் பயன்படுத்துதல் மிகச் சிறந்த நிலையில் உள்ளது. அனைத்து பயிற்சி மூலங்கள் இல்லாதுவிடினும் பாட விடயங்களை கற்பிப்பதற்கு அவசியமான பயிற்சி மூலங்களை இந்த நிறுவனங்கள் பயன்படுத்துவதில் உயர் மட்டத்தில் உள்ளனர். பாடநெறிகளை பயிற்றுவிக்கும் மத்தியநிலையங்களின் தரம் மற்றம் மத்தியநிலையங்களின் சுகாதார வசதிகள் சிறந்த முறையில் காணப்படுகின்றது.

பயிற்சியாளர்கள் தொழிலைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக கவனத்தில் எடுத்துக்கொண்டால் பயிற்சியாளர்களில் 62% வீதமானோர் ஏதாவதோர் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் நிலையில் உள்ளனர். அது இந்த பாடநெறிகள் நியாயமான நிலையில் உள்ளது என எடுத்துக்காட்டுகின்றது. தொழில்புரியும் மாணவர்களில் அதிகமானோர் (31% வீதமளவில்) ரூபா 10000 – 15000 இடையில் மாதாந்த வருமானத்தைப் பெறும் தொழில்களில் இருப்பதுடன், ரூபா 15000 – 30000 இடையில் மாதாந்த வருமானத்தைப் பெறும் தொழில்களில் 25.8% வீதமானோர் இருக்கின்றனர். இதிலிருந்து பயிற்சி பெற்றவர்கள் ஒரு நல்ல வருமானத்தைப் பெறும் நிலையில் இருக்கின்றார்கள் எனக் கூறமுடியும். அதனைக் கீழ்வருமாறு காட்ட முடியும்.

மாதாந்தம் பெற்றுக்கொள்ளும் வருமானம்




ரூபா 5,000 விடக் குறைவு
ரூபா 30,000 விட அதிகம்
ரூபா 25,000 – 30,000 ம் இடையில்
ரூபா 15,000 – 20,000 ம் இடையில்
ரூபா 20,000 – 25,000 ம் இடையில்
ரூபா 10,000 – 15,000 ம் இடையில்
பதிலளிக்காதோர்

மூலம்: மாதிரி ஆய்வு 2014

பொதுவாக எடுத்துக்கொண்டால், மாத்தறை மாவட்டத்தின் தொழில் பயிற்சி நிறுவனங்கள் இலங்கை இளைஞர்களின் தொழில் முன்னேற்றத்திற்கு மிகச்சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளது எனக் கூறலாம். இந்த செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு கீழ்வரும் யோசனைகளை முன்மொழிய முடியும்.

பயிற்சி அளித்தல் மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பாக கீழ்வரும் யோசனையை வழங்க முடியும். பாடநெறி தொடர்பாக பிரச்சாரத்திற்கு பிரபல்யமான ஊடகமாக, முன்னர்

பாடநெறிகளைப் பயின்ற மாணவர்களின் ஊடாக அறிவித்தல் அமைந்துள்ளது. அதனால் தற்போது உள்ள மாணவர்களை அது தொடர்பாக ஊக்குவித்தல் சிறந்த உபாயமார்க்கமாகும். பாடநெறி தொடர்பாக அறிவூட்டுகையில் பிரபல்யமான ஊடகத்தின் ஊடாக அல்லது இணையத்தளத்தைப் பயன்படுத்தல் மிகப் பொருத்தமானதாகும். தொழிலை எதிர்பார்த்து பாடநெறிகளைப் பயில வரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பாடநெறியின் இறுதியில் தொழில்புரிவதற்கு பாடநெறி பயிலும் காலத்தில் மாணவர்களை ஊக்குவித்தல் வேண்டும்.

மத்தியநிலையங்களின் நிலை மற்றும் வசதி என்பன தொடர்பாக கவனம் செலுத்துகையில் மத்தியநிலையங்களில் வசதிகள் மிகவுயர்ந்த நிலையில் இருப்பதுடன், இதனை தொடர்ச்சியாகப் பேணுதல் வேண்டும். பயிற்றுவிப்பதற்கு பயன்படுத்தப்படும் ஊடகத்தில் வேறுபடுத்தலை மேம்படுத்த முடியுமாயின் அதனூடாக பயிற்சியாளர்களின் ஏகாதிபத்தியத்தை இல்லாதொழிக்க முடியும். அதேபோல், மேலதிக பயிற்சி மற்றும் தொழிலில் இணைதல், பரீட்சை முடிவடைந்து மூன்று மாதத்தினுள் நிரந்தர சான்றிதழை கட்டாயமாகப் பெற்றுக்கொடுத்தல், அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு காலதாமதமாகும் எனில் தற்காலிக சான்றிதழைப் பெற்றுக்கொடுத்தல் அல்லது முடிந்தவரையில் விரைவாகப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். NVQ மட்ட சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு பயிற்சியாளர்களை ஊக்குவித்தல் மிக முக்கியமானமாகும்.

மேலதிக பயிற்சி மற்றும் தொழிலில் இணைதல் என்பவற்றுக்கு பயிற்சி பாடநெறிகளுக்கு உரிய தொழில்களில் பயற்சிக்கு பயிற்சியாளர்களை அனுப்புவதுடன். பயின்ற பாடநெறிகளுக்கு உரிய துறையில் தொழிலுக்கு பயிற்சியாளர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தொழிலுக்கு அதிக கேள்வி இருக்கும் துறைகளுக்கு பாடநெறிகளை அதிகமாக்குதல், தற்போதுள்ள பாடநெறிகளை தொழில் சந்தை கேள்விக்கு ஏற்றவகையில் திருத்தம் செய்தல், சுயதொழிலுக்கும் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கும் பயிற்சியாளர்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், இறுதியாக தொழிலுக்கு பயிற்சியாளர்களை அனுப்பியதன் பின்னர் பயிற்சியாளர்களுக்கு வழிகாட்டல் மற்றும் பின்னூட்டலைப் பெற்றக்கொள்ளல் வேண்டும் என்பதுடன், பாடநெறியின் இறுதியில் தொழில் பெற்றுக்கொள்ளுவதற்கு கட்டாயாமாக மாணவர்களை வலியுறுத்துதல் வேண்டும்.

இந்த யோசனைத் திட்டத்தை செயற்படுத்தவதன் மூலம் தொழில் பாடநெறிகளின் தரத்தினை மேலும் அதிகரிக்க முடியும். அது சிறந்த பாடநெறிக் கல்வியின் ஊடாக உழைப்பு வலுவை உருவாக்குவதற்கு வழியமைத்துக் கொடுக்கும்.

## 5.4 "ரக்கியா அருண" தொழில் தகைமை நிகழ்ச்சித்திட்டம்

தொழில் வழிகாட்டல் எதிர்காலத்தில் தாம் தேர்ந்தெடுக்க வேண்டிய தொழிலுக்கு உரியவாறு கல்வி மற்றும் திறனை அபிவிருத்தி செய்யக்கூடிய பாடநெறியைத் தேர்ந்தெடுப்பதற்கு பாடசாலை மாணவர்களுக்கும், பாடசாலையை விட்டு நீங்கிய மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அவசியமான ஓர் அங்கமாகும். எனினும் தற்போது தொழில்பயிற்சி நிறுவனங்கள் தங்களுக்கு உரிய தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதுடன், கல்வி அமைச்சு பாடசாலைகளினுள் நடாத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் அதிலிருந்து முற்றாக வேறுபட்டிருப்பதனால் பொது தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரித்து, அவர்களை உரிய பயிற்சிக்கு அனுப்புவதன் ஊடாக தொழிலை தேர்ந்தெடுத்தல் காலத்தின் தேவையாகும்.

அதனால் இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை நாடு முழுவதிலும் உள்ள பாடசாலையை விட்டு நீங்கிய மாணவர்களுக்கு தொழில் தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கும், தனியார் துறையில் தொழில்களுக்கு செல்லல் தொடர்பாக அவர்களின் எண்ணக்கருவை மாற்றுதல், பூர்த்திசெய்துள்ள தகைமையின் அடிப்படையில் தனியார்துறை தொழில்களுக்கு அனுப்புதல் எனும் நோக்கத்துடன், " ரக்கியா அருண" தொழில் தகைமை நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த கருத்திட்டத்தின் நோக்கமாக அமைவது அரச துறையில் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி பாடசாலையை விட்டு நீங்களி மாணவர்களின் தொழில் பயிற்சித் தேவையை பூர்த்தி செய்வதற்கு அவசிய திட்டம் மற்றும் தலையீடு என்பவற்றை மேற்கொள்ளல், தொழில் பயிற்சி சந்தர்ப்பம் மற்றும் தொழில் சந்தர்ப்பம் தொடர்பாக தொழில் எதிர்பார்ப்பாளர்களின் இடைவெளியைப் குறைத்தல் இதற்காக இலங்கை தேசிய மனித வள அபிவிருதிச் சபையின் தலைவர் திரு தினேஷ் வீரக்கொடியின் அறிவுறுத்தலின் படியும் இலங்கை தேசிய மனித வள அபிவிருதிச் சபையின் பணிப்பாளர் திரு கே.ஏ.லலிததீர அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் தேசிய வணிக சபை, தொழில் பயிற்சி நிறுவனங்கள், வலயக் கல்வி காரியாலயம் மற்றும் மாவட்டச் செயலக மற்றும் அனைத்துப் பிரதேச செயலகங்களின் பங்களிப்புடன் 2014 நவம்பர் 04ம் திகதி பொலொன்னறுவை புலதிசி புத்தி மண்டபத்திலும் 2015.12.10 கம்பஹா மாவட்டத்திலும் மு.ப 9.00 இருந்து பி.ப 4.00 வரை 2 ரக்கியா அருண தொழில் தகைமை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு தேசிய வணிப சபையை இணைத்துக்கொண்டன் மூலம் தனியார் துறையின் 23 கைத்தொழிற்சாலைகள் இதில் பங்குபற்றின. அதேபோல் தொழில் எதிபார்க்கும் 1500 மாணவர்கள் இதில் பங்குபற்றியதுடன். இதில் கிட்டத்தட்ட 1000

மாணவர்கள் அத்தினத்தில் தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கு அந்த நிறுவனங்களின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். இந்த நிகழ்ச்சித்திட்டம் எங்கள் சபையின் நோக்கத்திற்கு அமைவாக மிகச்சிறப்பாக வெற்றியடைந்தது.





## 5.5 பொதுத்துறையின் செயற்திறன், வினைத்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கு மனிதவள உபாயமார்க்கத்தை அபிவிருத்தி செய்தல்.

"தலைமைத்துவம் என்பது ஒரு நபரின் தொலைநோக்கினை மேம்படுத்துவதுடன், ஒரு நபரின் செயலாற்றுகையை உயர் தரத்திற்கு கொண்டு செல்லல் மற்றும் வழமையான வரையறைகளுக்கு அப்பால் ஆளுமையைக் கட்டியெழுப்பல்" (பீட்டர் ட்ரக்கர்)

இலங்கையில் தற்போதுள்ள அரசாங்க கொள்கைகளில் தனியார் துறையின் முகாமைத்துவத் திறனை கட்டியெழுப்புவதற்கான முறைமைகள் ஏதுமில்லை. எனினும் சில அரசாங்க நிறுவனங்கள் மற்றும் சில அரை அரசாங்க நிறுவனங்களின் உதவியுமன் முன்னைய அரசாங்கம் இந்த பிரச்சினையை முன்னெடுப்பதற்கு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தற்போது, இலங்கையில் முகாமைத்துவத் தொகுதியில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் பொழுதும் கீழ் மட்ட முகாமைத்துவத் தொகுதியில் இருந்து பதவி உயர்வை வழங்கப்படும் பொழுழும் பொருத்தமான பதவிக்கு பொருத்தமான நபரைச் தேர்ந்தெடுக்க முடியாமல் உள்ளமை பொதுத் துறையில் காணப்படும் பாரிய பிரச்சனை ஆகும்.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் கீழ் உள்ள இலங்கை தேசிய மனித வள அபிவிருந்திச் சபை 2015ம் ஆண்டு இலங்கையின் பொதுத்துறையின் முகாமைத்துவத் திறனைக் கட்டியெழுப்புவதற்கான மனிதவள உபாயமார்க்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்த்து கருத்திட்ட முன்மொழிவை முன்மொழிந்தது. இதன் பிரதான நோக்கம் பொதுத்துறையின் செயற்திறன், வினைத்திறன் மற்றும் தரத்தினை

மேம்படுத்தல் மற்றும் இலங்கையின் பொதுத்துறைக்கு பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டகத்தைக் கட்டியெழுப்புதல் ஆகும்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிப்பிரிவில் இருந்து நான்கு நிபுணர்கள், இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு நிபுணர், பொது நிர்வாகம் முகாமைத்துவ அமைச்சின் ஒரு நிபுணர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த ஒரு நிபுணர், ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த ஒரு நிபுணர் என்பவர்களை உள்ளடக்கிய நிபுணத்துவக் குழுவின் தலைவராக பேராசிரியர். டபில்யூ.பி.ஜி. த அல்விஸ் (கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிப்பிரிவின் சிரேஸ்ட பேராசிரியர் )குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இரு நிபுணத்துவக் குழுக் கூட்டங்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிப்பிரிவில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டதுடன், குழுவில் உள்ள நிபுணர்களின் கருத்துகளின் அடிப்படையில் பொதுத்துறைக்கான ஆரம்ப இயலுமைச் சட்டகம் அபிவிருத்தி செய்யப்பட்டது. 09.10.2015ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் விதப்புரைக்கு அமைவாக, 03.11.2015ம் திகதி இலங்கையில் உள்ள பொதுத்துறை இடைமட்ட முகாமையாளர்களுக்காக ஹெகட்ர் கொப்பேகடுவ விவசாய ஆராச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் (HARTI) நடைபெற்றது. பொதுத்துறையின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 41 இடை மட்ட முகாமையாளர்கள் இதில் பங்குபற்றினர். பொதுத்துறையைச் சேர்ந்த இடை மட்ட முகாமையாளர்களின் தற்போதைய இயலளவை அடையாளம் காண்பதும் மற்றும் இலங்கையின் பொதுத்துறை சேவையின் செயற்திறன், வினைத்திறன் மற்றும் தரத்திற்கான இயலுமைச் சட்டகத்தை அபிவிருத்தி செய்வதற்கு அவர்களின் கருத்துகளையும் யோசனைகளையும் பெற்றுக்கொள்ளல் இதன் நோக்கமாகும்.

செயலமர்வின் கற்கை விளைவிற்கு அமைவாக அவற்களின் திறன் முகாமைத்துவ மட்டங்கள் உரு 1இல் கட்டப்பட்டவாறு கீழ்வரும் வகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.



உரு 1: முகாமைத்துவ திறன் மட்டம்




*Source: Survey data NHRDC-2015*

- உங்களின் முகாமைத்துவ திறன் மேம்படுத்தப்படுதல் வேண்டும் (20-46)
- உங்கள் பாதையில் நீங்கள் சிறந்த முகாமையாளராவதற்கு ( 47-73)
- உங்கள் குழுவை முகாமைத்துவம் செய்வதற்கு நீங்கள் சிறந்த பணியை ஆற்றுகின்றீர்கள்

31 இடைமட்ட முகாமையாளர்களிம் இருந்து கிடைக்கப்பெற்ற பதிலளிப்புக்கு அமைவாக அனேக முகாமையாளர்கள் (கிட்டத்தட்ட 91 வீதமானவர்கள்) சிறந்த முகாமையாளர்காளக வர விரும்பியதுடன், இதில் 9 வீதமானவர்கள் அவர்களுடைய குழுவில் சிறந்த பணியை ஆற்றியதுடன், உங்களின் முகாமைத்துவ திறன் மேம்படுத்தப்படுதல் வேண்டும் எனும் வகுதியில் யாரும் பதிலளிக்கவில்லை. அதனால் இலங்கையின் பொதுத்துறையில் இருக்கும் பெரும்பான்மையான இடைமட்ட முகாமையாளர்கள் முகாமையாளர்களாக தங்கள் பணியை சிறப்பாக ஆற்றவில்லை எனக் கூறமுடியும்.

அதனால் இலங்கையின் பொதுத்துறையில் உள்ள முகாமையாளர்களின் முகாமைத்துவத் திறனை கட்டியெழுப்புவதற்கு இயலுமைகள் மேம்படுத்தப்படுதல் அவசியமாகும். தற்போதுள்ள அரசாங்கத்தின் தேசிய மட்ட நோக்கத்தையும் இலங்கையின் எதிகான மேற்குறிப்பிட்ட பிரச்சினையையும் எதிர்கொள்வதற்கு ''பொதுத்துறையின் முகாமைத்துவ திறனை கட்டியெழுப்புவதற்கு மனிதவள உபாயமார்க்கங்களை அபிவிருத்தி செய்தல்'' எனும் கருத்திட்டம் பெறுமதியான சொத்தாக இருக்கும்.

## 5.6 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை பலப்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் ஊடாக பலப்படுத்துதல் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் உள்ள இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி மன்றத்தின் இலக்காகும். அண்மையின் மூன்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பொலொன்னறுவை, மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் நிர்வாகம், நிதி முகாமைத்துவம், சந்தையை அடையாளம் காணல், முகாமைத்துவ பிரச்சினைகள் மற்றும் உபாயங்கள் மற்றும் கொள்கை சட்டகம் (வரி, கணக்காய்வு மற்றும் பதிவு) எனும் திறன்களை மேம்படுத்துவதற்காக நடாத்தப்பட்டது.




மாத்தறையில் பங்குபற்றிய சிமதொ(SME) மாத்தறை மாவட்ட செயலாளரினால் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுதல்

மேற்குறிப்பிட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் 25 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் பங்குபற்றினர். பொலொன்னறுவையில் இருந்து 86 தொழில்முயற்சியாளர்கள், மாத்தறையில் இருந்து 94 தொழில்முயற்சியாளர்கள் மற்றும் நாவலப்பிட்டி மற்றும் கண்டி பிரதேச செயலகங்களில் இருந்து 70 தொழில்முயற்சியாளர்கள். இந்த தொழில்முயற்சியாளர்கள் பிரதேச செயலக மற்றும் மாவட்ட மட்டத்தில் பல்வேறுபட்ட வியாபாரங்களில் ஈடுபட்டிருப்பதுடன், கைத்தொழில் (தயாரிப்பு: செங்கற்கள், மரவேலைகள், வாசனைத்திரவியங்கள், தையல், கட்டுமானம்), சேவைகள் (சலூன், கராஜ், தொழில்நுட்பம், இரும்பு பட்டறைக் கொல்லர், மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், அடகு நிலையங்கள், வெல்டிங், சாஸ்திரம், உணவு விடுதிகள், வீடு மற்றும் கார் விற்பனை, வாடகைக் கார்), விவசாயம் (விலங்கு வேளாண்மை, பெருந்தோட்டம், தோட்டம்) போன்ற சுயதொழில் கருத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

| மாவட்டம் | திகதி | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பொலொன்னறுவை | 15.12.2015 | 21 | 65 | 86 |
| மாத்தறை | 23.12.2015 | 37 | 57 | 94 |
| கண்டி, நாவலப்பிட்டி | 30.12.2015 | 20 | 50 | 70 |
| **மொத்தம்** | | **78** | **172** | **250** |

நிதி முகாமைத்துவம், கிடைக்கக்கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ளல், ஏனைய நிறுவனங்களுடன் வலையமைப்பு, அவர்களின் பொருட்களை சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல் மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப மேம்படுத்தல் போன்றவற்றில் பல்வேறுபட்ட சிக்கல்களை சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் எதிர்கொள்கின்றனர். இந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்ப அடிப்படைகளை வழங்குகின்றது.

பெரும்பாலான தொழில்முயற்சியாளர்கள் நிதியினை முகாமைத்துவம் செய்வதில் வெற்றிகரமாக செயற்படுவதில்லை. இலங்கையில் வியாபாரங்கள் தோல்வியடைவதற்கு இது மிகப் பெரிய பிரச்சினையாகும். பயிற்சியில் பங்குபற்றிய அனேக தொழில்முயற்சியாளர்கள் அவர்களின் வியாபாரத்தை வினைத்திறனுடனும் செயற்திறனுடனும் கொண்டு நடாத்துவதற்கு பயிற்சிகள் பெறுமதியாக அமைந்தது என உடன்பட்டனர்.

வியாபாரத்தை ஊக்குவிக்கும் பொழுது மத்திய நிதிக் கட்டுப்பாடு, வரி முகாமைத்துவம் மற்றும் சட்டப்பிரச்சினைகளை பராமரிப்பதை ஊக்குவிப்பதே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக அமைந்துள்ளது. நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தும் பொழுது சந்தை வாய்ப்புகளை கண்டுபிடித்தல் மற்றும் பல்வேறுபட்ட விடயங்கள் விளக்கப்பட்டன.

இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பங்குதாரர்களின் கீழ்வரும் நோக்கங்கள் குறிப்பாக எய்தப்பட்டது.

1. நிர்வாகம், நிதி, சந்தையை அடையாளம் காணல், செயற்பாடு, முகாமைத்துவப் பிரச்சினைகள், உபாயமார்க்கங்கள் மற்றும் கொள்கைச் சட்டகங்களின் ( வரி, கணக்காய்வு, பதிவுசெய்தல்) திறனை அபிவிருத்தி செய்தல்.
2. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் இயலளவைக் கட்டியெழுப்புவதற்கு உள்நாட்டு மட்டத்தில் தனியார் துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் ( உதாரணம்: வணிகச் சம்மேளனம், மாவட்ட மற்றும் பிரசே செயலக மட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அலுவலர்கள்) வலையமைப்பை அபிவிருத்தி செய்தல்.
3. பயிற்சி, வலையமைப்பு மற்றும் தனியார்துறை பங்களிப்பின் ஊடாக தொழில்முயற்சிக் கலாச்சராத்தைக் கட்டியெழுப்பல்.

சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தியமைக்காக இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் மன்றத்திற்கும் மாவட்ட மற்றும் பிரதேச செயலக அலுவலர்களுக்கும் தொழில்முயற்சியாளர்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

## 5.7 சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் திறன்சார் ஊழியர்களின் தேவையை கண்டறிதல்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய மனித வள அபிவிருத்தி சபையினால் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் மனிதவள அபிவிருத்தி தொடர்பாக தனது தனது கவனத்தை செலுத்தியுள்ளது. இலங்கையில் விரைவாக அபிவிருத்தி அடைந்துவரும் துறைகளில் முக்கிய துறையாக இத்துறை காணப்படுகின்றது. தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் தலைவரினால் இத்துறைத்தொடர்பாக ஓர் ஆய்வு கற்கைநெறியை தொடர்வதற்கு சபையின் தலைவரான திரு. தினேஷ்வீரக்கொடியினால் இரண்டு நிபுணத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டன. ஒன்று சுற்றுலா கட்டிட நிர்மாண துறையில் ஏற்படும் திறன்சார் ஊழியர்களின் இடைவெளியினை கண்டறிதல் தொடர்பாக குழுவும் இன்னொன்று சுற்றுலாத்துறையில் காணப்படும் திறன்சார் ஊழியர்களின் இடைவெளியினை கண்டறிதல் தொடர்பான குழுவாகும். அதில் முதல் குழுவிற்கு திரு. மித்தபால என்பவரும் இரண்டாவது குழுவிற்கு திரு. சுனில் திசாநாயக்க என்பவரும் தலைவர்களாக நியமிக்கப்பட்டு ஆய்வுகற்கைநெறி தொடரப்பட்டது.

**"இலங்கையில் 2016 -2020 வரையான காலப்பகுதியில் சுற்றுலாத்துறையின் தூரநோக்கு"** என்ற தலைப்பில் ஆய்வு கற்கை அறிக்கையினை தயார்செய்வதற்கு கலாநிதி. சந்திரா எம்புல்தெனிய என்பவரால் இக்குழு கலந்துரையாடல்கள் தலைமைதாங்கப்பட்டன. சுமார் எட்டு கலந்துரையாடல்களினூடாக சுற்றுலாத்துறை சார்ந்த நிபுணர்களையும், சுற்றுலாத்துறையில்

பணிபுரிபவர்களையும், ஹோட்டல் உரிமையாளர்களையும், தொழிற் திறன் கற்கை நெறிகளை வழங்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவர்களையும் உள்ளடக்கியிருந்தது. துறைசார்ந்த நிபுணர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு அறிக்கை தயார்செய்யப்பட்டது.

**கற்கையின் நோக்கங்களாவன:**

- 2020 ஆம் ஆண்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையினை 4 மில்லியன்களாக அதிகரித்தல்
- 2020 ஆம் ஆண்டு தேவைப்படும் ஹோட்டல் மற்றும் அறைகளின் எண்ணிக்கையினை அடையாளங் காணல்
- ஹோட்டல் கட்டிட நிர்மாணங்களுக்கேற்பவும் அறைகளின் எண்ணிக்கைகேற்பவும் சுற்றுலாத்துறைக்கு தேவைப்படும் தொழிற்படையினை எண்ணிக்கையினை அடையாளங் காணல்.
- சுற்றுலாத்துறையின் தூரநோக்குக்கு கேற்ப தேவையான தொழிற்படையினை அடையாளங் காணல்.
- சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் தொடர்பாக கற்கைகளை வழங்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், அந்நிறுவனங்களின் திறன், வருடாந்த மாணவர்களின் உள்ளீடு வெளியீடு போன்றவற்றை அடையாளங் காணல்.
- தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் இடம்பெறும் இடங்களையும் அவற்றின் பெறுபேற்றினையும் அடையாளங் காணல்.

இவ்வறிக்கையானது தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் தலைவரினால் கௌரவ. பிரதமர் அவர்களுக்கும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிருஷ்தவ சமய விவகார அமைச்சருக்கும் கையளிக்கப்பட்டது. இவ்வறிக்கையானது எதிர்வரும் காலங்களில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் ஏற்படும் திறன்சார் ஊழியர்களின் பற்றாக்குறை மற்றும் ஹோட்டல் அறைகளின் தேவைப்பாடு என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் எதிர்வரும் காலங்களில் தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினாலும், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தினால், மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும். 2020 ஆம் ஆண்டு இலங்கையின் உல்லாச பயணிகளின் வருகையானது 4 மில்லியன்களாக இருக்கும் என்றும் அதனைக்கருத்திற் கொண்டே அதற்கு தேவையான தொழிற்படையை தயார் செய்வதில் அரச மற்றும் தனிார்த்துறையினருடன் இணைந்து தேசிய மனிதவள அபிவிருத்தி சபையானது செயற்படுகின்றது.



BMICH – DISCUSSION WITH SUB COMMITTEE- TOURISM SECTOR

## 5.8 இலங்கை மனிதவள அபிவிருத்தி மன்றத்தினுள் வினைத்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்தல்.

எதிர்காலத்திற்கு தயாராக உள்ள மனித உழைப்பு எனும் தொலைநோக்கத்தைக் கொண்ட இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை இலங்கையினுள் மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்கு வினைத்திறன் மிக்க சேவையை வழங்குவதற்காக ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழுக்கு அமைவாக செயற்படுத் நிறுவனம் என சான்று பெற்றுள்ளது.

11.11.2015 ம் ஆண்டு இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட நுண்ணாய்வுக்கு நசெயற்படும் நிறுவனம் என மீண்டும் விதப்புரை செய்யப்பட்டது. இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ISO 9001:2008 தர முகாமைத்துவ முறைமைக்கு இணக்கமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக தரமிக்க சேவையை வழங்குவதற்கு நாங்கள் அர்பணிப்புடன் உள்ளோம்.

## 5.9 பத்திரிகை

நிறுவனம், கைத்தொழில் மற்றும் இளைஞர்களுக்கிடையில் காணப்படும் தகவல் பரிமாற்ற இடைவெளியைக் குறைக்கும் நோக்கத்துடன் எங்கள் சபையினால் இந்த வருடமும் பத்திரிகை வெளியிடப்பட்டதுடன், இது 2015 ஜுன் மாதம் வெளியிடப்பட்டது.

## 6. 31.12.2015 ம் திகதியன்று நிதிக் கூற்று

இல.ரூபா

| | குறிப்பு | 2015 | 2014 | மதிப்பீடு செய்யப்பட்டது |
|---|---|---|---|---|
| **சொத்துகள்** | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | 1 | 2,323,986.29 | 2,981,759.97 | 347,184.85 |
| பெறுவனவுகள் | 2 | 71,162.82 | 281,607.05 | 71,162.82 |
| கையிருப்புகள் | 3 | 562,194.63 | 447,930.23 | 560,000.00 |
| முற்கொடுப்பனவுகள் | 4 | 179,949.64 | 165,183.29 | 180,000.00 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 5 | 2,131,857.17 | 1,516,677.46 | 2,100,000.00 |
| | | **5,269,150.55** | **5,393,158.00** | **3,258,347.67** |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | |
| உட்கட்டமைப்பு, பொறி மற்றும் உபகரணங்கள் | 6 | 6,599,800.71 | 7,266,852.17 | 12,800,000.00 |
| வாகனங்கள் | 6 | 5,197,328.77 | 7,285,479.45 | 5,200,000.00 |
| ஏனைய சொத்துக்கள் | 6 | 579,571.14 | 730,003.75 | 879,000.00 |
| | | 12,676,700.62 | 15,282,335.37 | 18,879,000.00 |
| **மொத்தச் சொத்துகள்** | | **17,945,851.17** | **20,675,493.37** | **22,137,347.67** |
| **பொறுப்புகள்** | | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| கொடுப்பனவுகள் | 7 | 316,701.07 | 383,959.20 | 300,000.00 |
| குறுகிய கால ஏற்பாடுகள் | 8 | 318,242.82 | 237,742.82 | 240,000.00 |
| **நடைமுறையல்லா பொறுப்புகள** | | **634,943.89** | **621,702.02** | **540,000.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| ஊழியர் நன்மைகள் | 9 | 1,860,905.88 | 1,592,855.75 | 1,860,000.00 |
| | | **1,860,905.88** | **1,592,855.75** | **1,860,000.00** |
| **மொத்தப் பொறுப்புகள்** | | **2,495,849.77** | **2,214,557.77** | **2,400,000.00** |
| **தேறிய சொத்துக்கள்** | | **15,450,001.40** | **18,460,935.60** | 19,737,347.67 |
| **தேறிய சொத்துக்கள்/ உரிமைப் பங்குகள்** | | | | |
| **மூலதனம் வழங்கப்பட்டது** | | | | |
| பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம் | | 3,000,000.00 | 3,000,000.00 | 3,000,000.00 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | | 2,063,777.20 | 1,808,200.00 | 3,700,000.00 |
| அரச நன்கொடைகள் - மூலதனம் | | 13,148,819.55 | 16,776,387.93 | 17,300,000.00 |
| திரட்டப்பட்ட மிகை/(பற்றாக்குறை) | | (2,762,595.35) | (3,123,652.33) | (4,262652.33) |
| **மொத்த தேறிய சொத்துகள் /உரிமைப் பங்குகள்** | | **15,450,001.40** | **18,460,935.60** | **19,737,347.67** |

மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை அரச துறைக்கான நிதியியல் நியமங்களுடன் இணங்குகின்றது என சான்றுபடுத்துகின்றேன்.

யு.எஸ்.டி விதானகே
உதவிப் பணிப்பாளர்
(நிதி)

திகதி:

பக்கம் 5 இருந்து 13 வரை குறிப்பிடப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றின் ஒரு பகுதியாகும். இதற்கு சபை பணிப்பாளர்கள் பொறுப்பாளர்கள்.

| | |
|---|---|
| மல்காந்தி ஜயவர்தன | பேரசிரியர். லக்ஷ்மன் ஜயதிலக்க |
| சபையின் அங்கத்தவர் | சபையின் அங்கத்தவர் |

## 7. 2014 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று

இல.ரூபா

| | குறிப்பு | 2015 | 2014 | மதிப்பீடு செய்யப்பட்டது |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| அரச மானியம் - மீண்டுவரும் | 10 | 19,830,000.00 | 18,134,114.54 | 21,000,000.00 |
| அரச மானியம் - மூலதனம் | 11 | 8,866,349.84 | 16,840,222.46 | 19,080,000.00 |
| ஏனைய நன்கொடைகள் | 12 | - | 604,764.07 | - |
| சொத்து அகற்றல் வருமானம் | 13 | (15,625.68) | 1,346.44 | - |
| ஏனைய வருமானம் | 14 | 112,813.48 | 279,061.74 | 113,000.00 |
| **மொத்த வருமானம்** | | **28,793,537.64** | **35,859,509.25** | **40,193,000.00** |
| **செலவுகள்** | | | | |
| கூலி, சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள் | 15 | 15,622,203.63 | 12,915,337.81 | 15,500,000.00 |
| மானியங்கள் மற்றும் ஏனைய பரிமாற்றல் கொடுப்பனவுகள் | 16 | 3,939,763.41 | 12,273,441.07 | 13,080,000.00 |
| வழங்கல் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுகள் | 17 | 674,309.01 | 268,558.17 | 900,000.00 |
| தேய்வு மற்றும் தவணை முறைக் கடன் கரைப்பு | 6 | 5,193,891.31 | 4,927,597.71 | 6,000,000.00 |
| பயணம், பிழைப்பூதியம், கொடுப்பனவுகள் | 18 | 147,587.50 | 264,326.50 | 1,500,000.00 |
| பயன் மற்றும் சேவைகள் | 19 | 3,031,239.97 | 2,456,180.57 | 2,890,000.00 |
| பராமரிப்பு செலவுகள் | 20 | 1,324,023.91 | 1,285,975.10 | 1,300,000.00 |
| ஏனைய செலவுகள் | 21 | 174,647.50 | 280,990.70 | 162,000.00 |
| **மொத்தச் செலவுகள்** | | **30,107,666.24** | **34,672,407.63** | **41,332,000.00** |
| **மிகை/(பற்றாக்குறை)** | | **(1,314,128.60)** | **1,187,101.62** | **(1,139,000.00)** |

## 8.2015 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு மாற்றக்கூற்று

இல.ரூபா

| | கட்டுப்படுத்தும் நிறுவனத்தின் உரிமையாளர்களின் பண்புக்குணகம் | | | | |
|---|---|---|---|---|---|
| | பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம் | தீர்மானிக்கப்பட்ட ஒதுக்கு | அரச மானியம் -மூலதனம் | திரட்டிய மிகை/ (பற்றாக்குறை) | மொத்த தேறிய சொத்து/ உரிமைப்பங்கு |
| 31 ஜனவரி 2013ம் திகதி மீதி மு/கொ | 3,000,000.00 | 1,833,030.00 | 17,583,167.18 | (4,335,854.05) | 18,080,343.13 |
| முன்வருட சீராக்கல் சொத்து புதுப்பித்தல் இழப்பு | - | (24,830.00) | - | 24,830.00 | - |
| அரசாங்க மானியங்கள் பறிமாற்றல் வரிகள் | - | - | - | - | - |
| தேறிய சொத்து /பங்கு உரிமைப் பற்றாக்குறை/ மிகை என்பவற்றில் இக்காலப்பகுதியில் நேரடியாக அடையாளம் காணப்பட்ட தேறிய வருமானம் | - | - | 4,108,088.46 | 270.10 | 4,108,358.56 |
| இக்காலப் பகுதியின் வருமான பற்றாக்குறை | - | - | (4,914,867.71) | - | (4,914,867.71) |
| காலம் உபரி / பற்றாக்குறை | - | - | - | 1,187,101.62 | 1,187,101.62 |
| இக்காலப் பகுதியின் அடையாளம் காணப்பட்ட மொத்த வருமானம் மற்றும் செலவு | - | (24,830.00) | (806,779.25) | 1,212,201.72 | 380,592.47 |
| **முன் கொண்டுவரப்பட்ட 31 டிசம்பர் 2013 திகதியில் மீதி** | **3,000,000.00** | **1,808,200.00** | **16,776,387.93** | **(3,123,652.33)** | **18,460,935.60** |
| 31 டிசம்பர் 2013 மீதி, மு/கொ | 3,000,000.00 | 1,808,200.00 | 16,776,387.93 | (3,123,652.33) | 18,460,935.60 |
| முன்வருட சீராக்கல் | | - | - | - | - |
| அரசாங்க கடன் / வரி பறிமாற்றல் | - | - | (3,882,047.84) | - | (3,882,047.84) |
| தேறிய சொத்து /பங்கு உரிமைப் பற்றாக்குறை/ மிகை என்பவற்றில் இக்காலப்பகுதியில் நேரடியாக அடையாளம் காணப்பட்ட தேறிய வருமானம் | - | 1,956,877.20 | 5,238,781.46 | (26,114.42) | 7,169,544.24 |
| மதிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் மீதான முந்தைய பெறுமதிகள | - | 1,701,300.00 | - | 1,701,300.00 | - |
| இக்காலப் பகுதியின் வருமான பற்றாக்குறை | - | - | (4,984,302.00) | - | (4,984,302.00) |
| காலம் உபரி / பற்றாக்குறை | - | - | - | (1,314,128.60) | (1,314,128.60) |
| இக்காலப் பகுதியின் அடையாளம் காணப்பட்ட மொத்த வருமானம் மற்றும் செலவு | - | 255,577.20 | (3,627,568.38) | 361,056.98 | (3,010,934.20) |
| **முன் கொண்டுவரப்பட்ட 31 டிசம்பர் 2014 திகதியில் மீதி** | **3,000,000.00** | **2,063,777.20** | **13,148,819.55** | **(2,762,595.35)** | **15,450,001.40** |

## 9. 31 டிசம்பர் 2015ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றுதிரட்டிய காசுப் பாச்சல் கூற்று

| | 2015 | இல.ரூபா<br>2014 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாச்சல்** | | |
| மிகை/(பற்றாக்குறை) | (1,314,128.60) | 1,187,101.62 |
| **காசு அற்ற அசைவுகள்** | | |
| பெறுமானத் தேய்வு | 5,193,891.31 | 4,927,597.71 |
| பணிக்கொடை | 268,050.13 | 930,305.50 |
| முன்னைய வருட சீராக்கல் | - | - |
| பெயரளவான தேய்வு வருமானம் | (4,984,302.00) | (4,914,867.71) |
| நிலையான சொத்துக்களில் இருந்து மூலதன வருமானம் | - | (4,557.75) |
| ஊழியக் கடன் வட்டி | (74,331.71) | (57,055.97) |
| கணக்காய்வுக் கட்டணம் | - | 78,160.00 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண விற்பனை மூலமான (உழைப்புகள்)/நட்டங்கள் | 15.625.68 | (1,346.44) |
| நுகர்வுக் களஞ்சிய அதிகரிப்புகள் (குறைவுகள்) | (114,264.40 | (110,224.49) |
| முற்கொடுப்பனவுகளில் அதிகரிப்புகள் (குறைவுகள்) | (14,766.36) | (35,323.29) |
| ஊழியர் கடன் அதிகரிப்புகள் (குறைவுகள்) | (621,929.71) | (302,255.79) |
| ஏனைய முற்கொடுப்பனவு அதிகரிப்புகள் (குறைவுகள்) | - | 20,000.00 |
| கொடுப்பனவு அதிகரிப்புகள் (குறைவுகள்) | (67,258.13) | (1,085,648.17) |
| குறுகிய கால ஏற்பாடுகளில் அதிகரிப்புகள் (குறைவுகள்) | 80,500.00 | - |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் அதிகரிப்புகள் | 6,750.00 | (9,000.00) |
| பெறுவனவுகளில் அதிகரிப்புகள் | 210,444.23 | (31,045.55) |
| கொடுப்பனவு செய்யப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் | - | (81,580.00) |
| கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடை | -<br>(497,712.75) | (497,712.75) |
| அரச மானியம் | 781,952.16 | 4,108,088.46 |

| | | |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாச்சல்** | **(633,767.39)** | **4,120,634.98** |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாச்சல** | | |
| தளபாட மற்றுத் பொருத்திகள் கொள்வனவு | - | (139,495.60) |
| அலுவலக உபகரணக் கொள்வனவு | (37,600.00) | (622,261.00) |
| மின்சார பொருத்திகள் கொள்வனவு | - | (13,899.00) |
| கணணிக் கொள்வனவு | (5,580.00) | (1,204,700.00) |
| வாகனக் கொள்வனவு | - | - |
| ஊழியர் கடன் மீதான வட்டி | 74,331.71 | 57,055.97 |
| மென்பொருள் செலவு | - | (6,000.00) |
| புத்தகக் செலவு | (2,020.00) | (4,250.00) |
| ஏனைய சொத்துக் கொள்வனவு | (56,075.00) | (601,339.00) |
| பொறி மற்றும் உபகரண விற்பனையில் இருந்தான வருமானம் | 2,937.00 | 17,960.00 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாச்சல்** | **(24,006.29)** | **(2,516,928.63)** |
| நிதிச் செயற்பாடுகளில் இருந்தான காசுப்பாச்சல் | - | - |
| நிதி நடவடிக்கைகயில் இருந்தான தேறிய காசுப் பாச்சல் | - | - |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் அதிகரிப்பு / (குறைவு) | (657,773.68) | 1,603,706.35 |
| இக்காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | 2,981,759.97 | 1,378,053.62 |
| இக்காலப்பகுதியின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | **2,323,986.29** | **2,981,759.97** |
| **காசுப் பாச்சல் கூற்றின் குறிப்புகள்** | | |
| கையில் உள்ள காசு மற்றும் வங்கி மீதி மக்கள் வங்கிக் கணக்கு இலக்கம் 119100120409161 | 472,404.47 | 1,001,931.27 |
| இலங்கை வங்கிக் கணக்கு 165197 | 1,851,581.82 | 1,979,828.70 |
| | **2,323,986.29** | **2,981,759.97** |

## 10. குறிப்புகள்

| | குறிப்புகள் | 2015 | 2014 | Budgeted |
|---|---|---|---|---|
| **காசு மற்றும் காசுக்கு சமமானவை** | 1 | | | |
| மக்கள் வங்கிக் கணக்கு இலக்கம் 119100120409161 | | 472,404.47 | 1,001,931.27 | 317,184.85 |
| இலங்கை வங்கிக் கணக்கு 165197 | | 1,851,581.82 | 1,979,828.70 | 30,000.00 |
| | | **2,323,986.29** | **2,981,759.97** | **347,184.85** |
| **பெறுகைகள்** | 2 | | | |
| வரை.தேசிய கடதாசி நிறுவனம் | | - | 1,770.00 | |
| தேசிய மீன்பிடி மற்றும் கடல் பொறியியல் நிறுவனம் | | - | 208,674.23 | |
| இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு | | - | - | |
| நிமல் போப்பகே (முன்னாள் தலைவர்) | | 71,162.82 | 71,162.82 | 71,162.82 |
| | | **71,162.82** | **281,607.05** | **71,162.82** |
| **கையிருப்பு** | 3 | | | |
| நுகர்வுக் களஞ்சியம் | | 562,194.63 | 447,930.23 | 560,000.00 |
| | | **562,194.63** | **447,930.23** | **560,000.00** |
| **முற்கொடுப்பனவுகள்** | 4 | | | |
| வாகனக் காப்புறுதி | | 149,949.64 | 165,183.29 | 150,000.00 |
| மண்டபம் பதிவு செய்தமைக்காக அறவிடப்படவேண்டியுள்ள தொகை | | 30,000.00 | - | 30,000.00 |
| | | **179,949.64** | **165,183.29** | **180,000.00** |
| **ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | 5 | | | |
| ஊழியர் கடன் - இடர் | | 2,120,607.17 | 1,498,677.46 | 2,100,000.00 |
| விழாக்கால முற்பணம் | | 11,250.00 | 18,000.00 | - |
| | | **2,131,857.17** | **1,516,677.46** | **2,100,000.00** |

## ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (குறிப்பு 06)

| | தளபாடங்கள் மறறும் பொறுத்திகள் | | அலுவலக உபகரணங்கள் | | மின்சார பொறுத்திகள் மற்றும் உபகரணங்கள் | | கணணிகள் | | மென்பொருள் | | வாகனங்கள் | | புத்தகங்கள் | | ஏனைய சொத்துகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **அறிக்கையிடும் காலம் 01.01.2014 to 31.12.2014** | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** |
| ஆரம்ப மீதி | 1,945,637.94 | 1,818,342.34 | 2,803,492.20 | 2,278,209.95 | 71,555.25 | 57,656.25 | 5,616,658.13 | 4,420,588.13 | 776,556.61 | 770,556.61 | 18,950,000.00 | 18,950,000.00 | 84,347.15 | 80,097.15 | 1,015,204.50 | 413,865.50 |
| சேர்த்தல் | - | 139,495.60 | 37,600.00 | 622,261.00 | - | 13,899.00 | 5,580.00 | 1,204,700.00 | - | 6,000.00 | 1,500,000.00 | - | 2,020.00 | 4,250.00 | 56,075.00 | 601,339.00 |
| சீராக்கல் | 130,105.27 | 28,010.00 | 59,333.09 | 3,000.00 | (5,420.00) | - | (744,338.90) | - | -+ | - | - | - | (5.00) | - | 231,680.00 | - |
| இல்லாதாக்கல் | - | (40,210.00) | (26,779.00) | (99,978.75) | - | - | (12,306.25) | (8,630.00) | -- | - | (1,700,000.00) | - | - | - | (24,135.00) | - |
| **முடிவுறுத்தல் மீதி** | 2,075,743.21 | 1,945,637.94 | 2,,873,646.29 | 2,803,492.20 | 66,135.25 | 71,555.25 | 4,865,592.98 | 5,616,658.13 | 776,556.61 | 776,556.61 | 18,750,000.00 | 18,950,000.00 | 86,362.15 | 84,347.15 | 1,278,824.50 | 1,015,204.50 |
| சேர்க்கப்படட தேய்மானம் (வருட ஆரம்பத்தில்) | 580,607.41 | 396,348.29 | 626,349.80 | 470,306.99 | 27,708.77 | 20,177.65 | 2,507,100.82 | 1,730,043.30 | 205,281.16 | 11,859.13 | 11,664,520.55 | 8,214,520.55 | 74,644.05 | 74,047.75 | 294,903.85 | 242,238.48 |
| சீராக்கல் | 45,444.22 | 25,170.12 | 20,929.14 | - | - | - | 62,883.89 | - | - | - | - | - | - | - | 26,957.17 | - |
| தேய்மானம் ( நிதிச் செயலாற்றுகை கூற்றுக்கு அமைவாக) | 207,574.32 | 187,763.95 | 286,635.82 | 253,002.55 | 4,453.13 | 7,531.12 | 803,311.88 | 782,616.39 | 194,139.15 | 193,422.03 | 3,588,150.68 | 3,450,000.00 | 1,059.96 | 596.30 | 108,566.37 | 52,665.37 |
| கழி – சொத்து செலவிடப்படட சேர்க்கப்பட்ட தேய்மானம் | - | (28,674.95) | (10,658.69) | (96,959.74) | - | - | (11,962.99) | (5,558.87) | - | - | - | - | - | - | (11,075.89) | - |
| மறுமதிப்பீடு – சொத்து செலவிடப்பட்ட சேர்க்கப்பட்ட தேய்மானம் | - | - | (1,925.00) | - | (6,099.96) | - | (1,483,899.20) | - | - | - | (1,700,000.00) | - | (405.00) | - | (9,035.00) | - |
| **முடிவுறுத்தல் மீதி** | 833,625.95 | 580,607.41 | 921,331.07 | 626,349.80 | 26,061.90 | 27,708.77 | 1,877,434.40 | 2,507,100.82 | 399,420.31 | 205,281.16 | 13,552,671.23 | 11,664,520.55 | 75,299.01 | 74,644.05 | 410,316.50 | 294,903.85 |
| **தேறிய கொண்டுசெல் லல் தொகை** | 1,242,117.26 | 1,365,030.53 | 1,952,315.22 | 2,177,142.40 | 40,073.35 | 43,846.48 | 2,988,158.58 | 3,109,557.31 | 377,136.30 | 571,275.45 | 5,197,328.77 | 7,285,479.45 | 11,063.14 | 9,703.10 | 868,508.00 | 720,300.65 |

| **கொடுப்பனவுகள்** | **7** | **2015** | **2014** | **Budgeted** |
|---|---|---|---|---|
| IWSS சேர்வே செலவு | | - | 4,580.57 | |
| NVQ சான்றிதழ் உரிமையாளர்கள் - காலி | | - | 19,000.00 | |
| NVQ சான்றிதழ் உரிமையாளர்கள் - பெலியத்த | | - | 6,000.00 | |
| சம்பளம் மற்றும் கூலி – NIFNI | | - | 63,390.48 | |
| தொலைபேசி | | 19,961.80 | 11,472.19 | 20,000.00 |
| இணையம் | | 13,690.00 | . 11,123.58 | 13,000.00 |
| பத்திரிகை பில் | | 3,030.00 | 1,820.00 | 3,000.00 |
| துப்பரவு மற்றும் பாதுகாப்பு | | 125,356.47 | 125,356.47 | 125,356.47 |
| உள்நாட்டுப் பயணச் செலவு | | - | 6,737.50 | - |
| ஏனைய சேவைகளுக்கான செலவு | | - | 1,996.80 | - |
| தற்காலிக சம்பளம் | | 27,122.00 | 30,396.32 | 22,000.00 |
| மேலதிக நேரக் செலவு | | 11,880.80 | 36,570.17 | 11,000.00 |
| விடுமுறைக் கொடுப்பனவு | | 3,490.75 | 7,440.50 | 3,500.00 |
| மின்சாரம் செலுத்த வேண்டியது | | 53,453.68 | 57,074.62 | 53,453.53 |
| கிளிநொச்சி ஆய்வுக் செலவு | | - | 1,000.00 | - |
| தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிக்காக செலுத்த வேண்டிய முதல் | | 4,325.47 | | 4,000.00 |
| சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்காக திட்டத்திற்காக செலுத்தப்பட வேண்டியது | | 32,097.60 | | 28,000.00 |
| தொழிற்சந்தை செயல்திட்டத்திற்கான செலுத்தப்பட வேண்டியது | | 18,582.50 | | 13,000.00 |
| மனிதவள அபிவிருத்தி செயல்திட்டத்திற்கு செலுத்தப்பட வேண்டியது | | 3,710.00 | | 3,690.00 |
| | | **316,701.07** | **383,959.20** | **300,000.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| **குறுகிய கால ஏற்பாடுகள்** | **8** | | | |
| கணக்காய்வுக் கட்டணம் - 2013 | | 85,000.00 | 85,000.00 | - |
| கணக்காய்வுக் கட்டணம் – 2014 | | 81,580.00 | 81,580.00 | 81,580.00 |
| கணக்காய்வுக் கட்டணம் – 2015 | | 80,500.00 | - | 87,257.18 |
| ஐயக்கடன் ஏற்பாடு – நிமல் போபகே | | 71,162.82 | 71,162.82 | 71,162.82 |
| | | **318,242.82** | **237,742.82** | **240,000.00** |
| **ஊழியர் நன்மைகள்** | **9** | | | |
| பணிக்கால கொடுப்பனவு ஏற்பாடு | | 1,860,905.88 | 1,592,855.75 | 1,860,000.00 |
| | | **1,860,905.88** | **1,592,855.75** | **1,860,000.00** |
| **அரச மானியம் - மீண்டுவரும்** | 10 | **19,830,000.00** | **18,134,114.54** | **21,000,000.00** |
| **அரச மானியம் - மூலதனம்** | 11 | | | |
| அரச மானியம் - மூலதனம் | | 3,882,047.84 | 11,920,797.00 | 13,080,000.00 |
| பெயரளவான தேய்மான வருமானம் | | 4,984,302.00 | 4,914,867.71 | 6,000,000.00 |
| அரச மானியம் - மூலதனம் | | - | 4,557.75 | - |
| | | **8,866,349.84** | **16,840,222.46** | **19,080,000.00** |
| **ஏனைய நன்கொடைகள்** | 12 | | | |
| அமைச்சின் நன்கொடை | | - | 499,804.07 | - |
| Stromme | | - | 104,960.00 | - |
| | | **-** | **604,764.07** | - |
| **சொத்து அகற்றல் வருமானம்** | 13 | **(15,625.68)** | **1,346.44** | - |

**ஏனைய வருமானம்** 14

| | | | |
|---|---|---|---|
| நானாவித வருமானம் | 8,901.20 | 173,908.14 | 8,900.00 |
| இடர் கடன் வட்டி | 74,331.71 | 57,055.97 | 74,519.43 |
| CADREP | - | 48,097.63 | - |
| IWSS கணிப்பு | 4,580.57 | - | 4,580.57 |
| NVQ சான்றிதழ் - காலி | 19,000.00 | - | 19,000.00 |
| NVQ சான்றிதழ் - பெலியத்த | 6,000.00 | - | 6,000.00 |
| | **112,813.48** | **279,061.74** | **113,000.00** |

**கூலி, சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள்** 15

| | | | |
|---|---|---|---|
| சம்பளம் மற்றும் கூலி | 6,349,736.22 | 6,040,218.22 | 6,349,736.22 |
| பதில் கடமை சம்பளம் | 41,049.96 | 77,692.80 | 41,049.96 |
| விசேட கொடுப்பனவு | 1,140,090.33 | 1,101,577.04 | 1,140,090.33 |
| வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு | 2,359,810.32 | 2,387,795.67 | 2,359,810.32 |
| இடைக்காலக் கொடுப்பனவு | 2,644,752.69 | 150,000.00 | 2,644,752.69 |
| போக்குவரத்துக் கொடுப்பனவு | 360,000.00 | 166,677.42 | 360,000.00 |
| எரிபொருள் கொடுப்பனவு | 232,850.00 | 340,006.45 | 232,850.00 |
| ஊ.சே.நி | 1,409,619.21 | 1,096,756.05 | 1,409,619.21 |
| ஊ.ந.நி | 352,405.12 | 274,189.45 | 352,405.12 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 91,894.00 | 132,582.86 | 91,894.00 |
| விடுமுறைக் கொடுப்பனவு | 28,544.25 | 23,388.75 | 28,544.25 |
| தற்காலிக சம்பளம் | 343,401.40 | 194,147.60 | 221,197.77 |
| பணிக்கொடைச் செலவுகள் | 268,050.13 | 930,305.50 | 268,050.13 |
| | **15,622,203.63** | **12,915,337.81** | **15,500,000.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| **மானியங்கள் மற்றும் ஏனைய மாற்றல் கொடுப்பனவுகள்** | 16 | | | |
| செய்தித்தாள் | | 80,928.70 | 169,810.52 | 200,000.00 |
| தயட கிருள கண்காட்சி | | - | 762,508.68 | - |
| ஊழியச் சந்தை கற்கை | | 298,004.54 | 4,000,479.50 | 950,000.00 |
| ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி | | 1,218,751.48 | 722,527.18 | 1,420,000.00 |
| மத்தியகிழக்கு நாடுகளுக்கான இடம்பெயர்வு | | - | 350,794.40 | - |
| மாத்தறை மாவட்ட ஆய்வு | | 490,156.72 | 499,804.07 | 660,000.00 |
| செயற்திறனை அதிகரிப்பதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல் | | - | 29,437.37 | 400,000.00 |
| முன்னேற்றமடையாத குடும்பங்களுக்கான கற்கை | | - | 1,455,638.27 | - |
| முழுமையான அணுகல் கற்கை | | - | 866,720.24 | - |
| NHRDC.gov. lk | | - | 589,650.07 | - |
| கிளிநொச்சிக் கற்கை – பீபீபீ அணுகுமுறை | | - | 1,510,095.43 | - |
| ISO சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் | | 118,986.47 | 1,144,236.94 | 150,000.00 |
| கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | | - | 171,738.40 | - |
| மனிதவள அபிவிருத்தி தொடர்பான சர்வதேச பயிற்சி | | - | - | 4,000,000.00 |
| தலைமைத்துவபயிற்சி செய்வதற்கான மனிதவள மூலோபாயங்களை அபிவிருத்தி செய்தல் | | 162,655.00 | | 570,000.00 |
| தொழில் வழிகாட்டல் பயிற்சி செயல்திட்டம் | | 964,655.37 | | 1,070,000.00 |
| தகவல் தொழிநுட்பம் தொடர்பான திறணாம்மை இடைவெளி தொடர்பாக கற்கை | | 36,670.75 | | 1,120,000.00 |
| சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கான பயிற்சி | | 302,099.53 | | 1,080,000.00 |
| சுற்றுலா துறையிலுள்ள திறவாண்மை தொடர்பிலான இடைவெளி பற்றிய கற்கை | | 99,321.55 | | 1,160,000.00 |
| கல்வி துறைக்கான வரவுசெலவு திட்டத்தில் 1.5% GDP இலிருந்து 6% உயர்த்துவது | | 66,357.25 | | 200,000.00 |
| டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைகளுக்கான திட்ட முன்மொழிவு | | 101,176.05 | | 100,000.00 |
| | | **3,939,763.41** | **12,273,441.07** | **13,080,000.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| **<u>வழங்கல்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுகள்</u>** | 17 | | | |
| எழுது கருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | | 342,603.01 | 96,838.17 | 335,000.00 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | | 331,706.00 | 171,720.00 | 565,000.00 |
| சீருடை | | - | - | - |
| | | **674,309.01** | **268,558.17** | **900,000.00** |
| **தேய்மானம் மற்றும் தவணை முறைக் கடன் கரைப்பு** | 6 | **5,193,891.31** | **4,927,597.71** | |
| **<u>பயணச் செலவு, பிழைப்பூதியம் மற்றும் கொடுப்பனவு</u>** | 18 | | | |
| உள்நாட்டு பயணச் செலவு மற்றும் பிழைப்பூதியம் | | 8,387.50 | 13,526.50 | 10,000.00 |
| கணக்காய்வு அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு | | 78,000.00 | 66,400.00 | 104,000.00 |
| சபை அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு | | 61,200.00 | 184,400.00 | 1,386,000.00 |
| | | **147,587.50** | **264,326.50** | **1,500,000.00** |
| **பயன் மற்றும் சேவைகள்** | 19 | | | |
| சேவைவரி (Rates) | | 40,320.00 | 40,320.00 | 40,320.00 |
| மின்சாரம் | | 662,538.20 | 727,630.33 | 650,000.00 |
| தண்ணீர் | | 42,825.32 | 41,320.09 | 60,000.00 |
| தொலைபேசிக் கட்டணம் மற்றும் வாடகை | | 231,154.44 | 176,392.67 | 230,000.00 |
| தபால் மற்றும் டெலெக்ஸ் கட்டணம் | | 8,240.00 | 14,425.00 | 20,000.00 |
| சுத்திகரிப்புச் சேவை | | 593,927.64 | 386,768.66 | 540,000.00 |
| விளம்பரம் | | 68,931.00 | 37,094.40 | - |
| பாதுகாப்பு சேவை | | 910,349.50 | 804,750.00 | 682,000.00 |
| இணையம் | | 142,621.40 | 104,680.42 | 140,000.00 |
| ஆலோசனை | | - | 10,500.00 | - |
| ஏனைய பயன் மற்றும் ஏனைய சேவைகள் | | 330,332.47 | 112,299.00 | 527,680.00 |
| | | **3,031,239.97** | **2,456,180.57** | **2,890,000.00** |

20

| | | | | |
|---|---|---|---|---|
| **பராமரிப்புச் செலவுகள்** | | | | |
| கட்டடம் மற்றும் கட்டமைப்புத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 39,037.00 | - | 40,000.00 |
| பொறி மற்றும் இயந்திரத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | - | 181,611.90 | - |
| வாகனத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 386,873.49 | 739,786.70 | 400,000.00 |
| வாகனக் காப்புறுதி | | 358,770.10 | 307,844.00 | 400,000.00 |
| அலுவலக உபகரணத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 167,535.40 | 53,552.50 | 125,000.00 |
| கணணித் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 43,825.50 | - | 50,000.00 |
| ஏனைய சொத்துக்களின் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 327,982.42 | 3,180.00 | 285,000.00 |
| | | **1,324,023.91** | **1,285,975.10** | **1,300,000.00** |
| **ஏனைய செலவுகள்** | 21 | | | |
| கணக்காய்வுக் கட்டணம் | | - | 78,160.00 | 85,000.00 |
| செய்தித்தாள் | | 68,825.00 | 16,940.00 | 9,000.00 |
| ஊழியர் நலன்புரி | | 30,375.00 | 11,750.00 | 28,000.00 |
| மருத்துவச் செலவுகள் | | 3,546.00 | 4,999.00 | 5,000.00 |
| ஏனைய சேவைச் செலவுகள் | | - | 76,217.70 | - |
| சிற்றுண்டி செலவு | | 50,631.50 | 92,924.00 | 35,000.00 |
| வாசிகசாலை சேவைகள் | | 19,500.00 | - | - |
| தேசிய பத்திரிகை லிமிடட் | | 1,770.00 | - | - |
| | | **174,647.50** | **280,990.70** | **162,000.00** |

## 11. குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் ருக்கம், விளக்கக் குறிப்புகள்

**1.** இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை 1997ம் ஆண்டு 18ம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் நிறுவனத்திற்கு மனித வள அபிவிருத்திக்கு அவசியமான அனைத்து மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் சாட்டப்பட்டுள்ளது.

**2. கணக்குகளை விளக்கல் மற்றும் நிதியில் கூற்றுகளை வழங்குவதற்கான அதிகாரம்**

1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ம் பிரிவுக்கு அமைவாக, இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை பொதுக் கூட்டுத்தாபனமாக இருப்பதனால், நிறுவனத்தின் நிதியாண்டு முடிவடைந்தவுடன் உடனடியாக, நிறுவனத்தின் அதிகாரத்திற்காக அவ்வருடத்தில் அதன் கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான வருடாந்த அறிக்கையின் முன்வரைபினை தயாரித்தல் வேண்டும். இந்த அறிக்கை, அக்காலப்பகுதியில் உரிய அமைச்சரினால் வழங்கப்பட்ட யாதேனும் வழிகாட்டல்களைக் கொண்டிருக்கும். இந்த அறிக்கைகளின் பிரதிகளை, வருடம் முடிவடைந்த நான்கு மாதங்களின் பின்னர், உரிய அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் (அவர் உரிய அமைச்சராக இல்லாத பட்சத்தில்), திட்டமிடல் அமைச்சர் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல் வேண்டும்.

1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ம் பிரிவுக்கு அமைவாக, ஒவ்வொரு நிதியாண்டும், கணக்காய்வாளர் நாயகம் யாதேனும் குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்குமாறு கோரப்படின் அவ்வடிவத்தில், ஒவ்வொரு நிதியாண்டும் நிதியாண்டு முடிவடைந்து நான்கு மாதங்களின் பின்னர் நிறுவனத்தின் கணக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு நிறுவனமும் இந்த உப பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைவாக அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு தவறின் இச்சட்டத்தின் கீழ் குற்றமிழைத்ததாகக் கருதப்படுவதுடன், மஜிஸ்ரேட்டின் முன்னர் நம்பிக்கைகைய இழந்தால், ரூபா ஆயிரத்திற்கு குறைவில்லாத தண்டப்பணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

**3. இணக்கக் கூற்று**

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் கணக்கீட்டு முறை, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை அரச சேவை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக தயாரிக்கப்படுகின்றது.

**4. அளவீட்டு அடிப்படை**

சபையின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரய அடிப்படையில், குறிப்பிட்ட தளபாடம் மற்றும் பொருத்திகள், அலுவலக உபகரணங்கள், மின்சார பொருத்திகள் மற்றும் உபகரணங்கள்,

கணணிகள், வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் தவிர்த்து 2008 மற்றும் 2011ம் ஆண்டில் இலங்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீட்டின் கீழ் தயாரிக்கப்படுகின்றது.

## 5. சொத்துத்து மதிப்பீட்டுக்கான அடிப்படை

**5.1** சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவை குறைந்து செல்லும் தேய்மானத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பிடப்படுகின்றது.

**5.2** சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு தேய்மானம் அறவிடப்பட்டு மதிப்பிடப்பட்ட பயன்படுத்தல் காலத்தின் பின்னர் பதிவழிப்பு மேற்கொள்ளப்பட்டது.

**5.3** 2009ம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டவைகளுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுக்கு தேய்மானம் வழங்கப்படுவதில்லை மற்றும் அவை அககற்றப்படும் பொழுது முழு ஆண்டுக்கான தேய்மானம் வழங்கப்பட்டது மற்றும் 2009ம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட / அகற்றப்பட்ட திகதியின் அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படுகின்றது.

**5.4** நுகர்வுக் களஞ்சியம் குறைந்த ஆகுசெலவு மற்றும் தேறிய சாத்தியமான பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றது.

## 6. தேய்மானம்

சொத்துக்களின் வகை மற்றும் தேய்மான வீதங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்துக்களின் தன்மை மற்றும் அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டடம் மற்றும் கட்டமைப்பு | 2.5% |
| தளபாடம் மற்றும் பொருத்திகள் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| மினசாரப் பொருத்திகள் மற்றும் உபகரணங்கள | 20% |
| கணணிகள் | 20% |
| கணணி மென்பொருள் | 25% |
| வாகனங்கள் | 20% |
| புத்தகங்கள் | 10% |
| ஏனைய சொத்தக்கள் | 10% |

## 7. ஒப்பீட்டு இலக்கங்கள்

கடந்த நிதியாண்டின் இலக்கங்கள் மீண்டும் வகைப்படுத்தப்பட்டு மற்றும் சீராக்கப்பட்டு நிதிக்கூற்றுடன் ஒப்பிடத்தக்க வகையில் தயாரிக்கப்படும்.

## 8. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரான நிகழ்வுகள்

அனைத்து பொருளாக்கப்பட்ட ஐந்தொகை நிகழ்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது மற்றும் அவசிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது அல்லது நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 9. அரச மானியத்திற்கான கணக்கீடு

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபைக்கு பொதுத் திறைசேரியினால் அரசின் மூலதன மற்றும் மீண்டுவரும் மானியங்களாக கிடைக்கப் பெற்றவையின் மூலம் நிறுவனத்தின் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தொகை மற்றும் இவ்வருடம் தேய்மானமாக அறிவிடப்பட்ட தொகை என்பவை மூலதனச் சொத்துக்களின் பயன்பாட்டுக்கால முறையியல் அடிப்படை மீதான வருமானக அடையாளம் காணப்பட்டது.

## 10. ஓய்வூதிய நன்மைச் செலவு

### 10.1 பங்களிப்பு திட்டத்தை வரையறுத்தல் – ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு தகைமை பெற்ற அனைத்து ஊழியர்களுக்குமான பங்களிப்பு உரிய பங்களிப்பு நிதியத்தின் ஊடாக உரிய விதிமுறைகளின் அமைவாக அணவல் செய்யப்பட்டது.

### 10.2 ஓய்வூதியக் பணிக்கொடை

1983ம் ஆண்டு 12ம் இலக்க ஓய்வூதிய கொடுப்பனவுச்ச் சட்டத்தின் கீழ் வரும் அனைத்து ஊழியர்களுக்குமான கொடுப்பனவுகள், இலங்கை கணக்கியல் நியம இலக்கம் 19இல் குறிப்பிடப்பட்ட 'ஊழியர் நன்மைகள்' என்பதற்கு அமைவாக நிதிக்கூற்றில் ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. பணிக்கொடை பொறுப்பானது வெளிவாரியாக நிதியிடப்படவில்லை அல்லது அட்டுறுவாக பெறுமதியிடப்படவில்லை.


## 11. நிதிச் செயற்பாடுகள்


சபை அதன் மூலதனச் சொத்துக்களின் தொழிற்பாடு மற்றும் பராமரித்தல் என்பவற்றின் போது வினைத்திறமையுடன் செயற்பட்டதுடன் வருமானத்தை அறவிட்டது. வருமானச்

செலவுகளின் மிகை அல்லது பற்றாக்குறை, அனைத்து பொறுப்புகள் மற்றும் சொத்துக்களின் தேய்மானம் என்வற்றின் ஏற்பாடுகளின் பின்னர் ஏற்பட்டதாகும்.

## 12. காசுப் பாச்சல் கூற்று

இலங்கை அரச சேவை கணக்கியல் நியமம் 02இன் பிரிவு 27இல் குறித்துறைக்கப்பட்டவாறு நேரடியல்லா முறையில் காசுப்பாச்சல் கூற்று தயாரிக்கப்பட்டது.



## 12. கணக்காய்வு அறிக்கை மற்றும் பதில்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } வீரீவை /ஈ/என்எச் ஆர்டீசீ/ 1/15/80

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2016 திசெம்பர் 24

தலைவர் ,
இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை.

**இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1997 இன் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை பேரவையின் தலைவருக்கு 2016 திசெம்பர் 07 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல். என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.3 பெற வேண்டிய கணக்குகள்**

2012 ஆம் ஆண்டு முதல் முன்னாள் தலைவரிடமிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணம் மற்றும் மீளக் கையளிக்கப்படாத இருப்புப் பொருட்களின் பெறுமதியான ரூபா 71,162 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இவற்றுள் ரூபா 31,050 தொகையான பணத்தை அறவிடுவதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள் மற்றும் இருப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவையும் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பில் பரிசோதிக்க வேண்டுமெனினும், அனைத்து வாகனங்கள் தொடர்பிலும் பரிசோதனையொன்று இடம்பெற்றிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் நிதி விளைவுகள் ரூபா 1,314,129 ஆன பற்றாக்குறையொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,187,102 ஆனமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,501,231 ஆன வீழ்ச்சியொன்று ஏற்பட்டிருந்தது. மானியங்கள் மற்றும் ஏனைய மாற்றல் கொடுப்பனவுகள் ரூபா 8,333,678 இனால் குறைவடைந்திருந்ததெனினும், அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான செலவினத்திற்காக திறைசேரியிடமிருந்தான பெறுவனவுகள் ரூபா 7,973,872 இனால் குறைவடைந்திருந்தமை, சம்பளம் மற்றும் படிகள் ரூபா 2,706,865 இனால் அதிகரித்தமை போன்றன மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிதி மிகையொன்றும் ஏனைய வருடங்களில் நிதிப் பற்றாக்குறையொன்றினையும் காட்டியிருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை கருத்திற் கொள்ளும் போது நிறுவகத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையில் ரூபா 3,446,541 இலிருந்து ரூபா 19,501,966 வரை தொடர்ச்சியான அதிகரிப்பொன்றினைக் காட்டியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

1997 இன் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி பேரவை அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பந்தியின் பிரகாரம், வேலைவாய்ப்புக்கள், பயிற்சி மற்றும் கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தல்,

வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல், தீங்கு விளைவிக்கும் நபர்களின் குழுக்களுக்காக சமூக பாதுகாப்பினைத் திட்டமிடல் உள்ளடங்கலாக தேசிய மனிதவளக் கொள்கையின் அனைத்து பிரிவுகள் தொடர்பிலும் ஆராய்ந்து பார்த்து அந்த கொள்கைகளில் முன்னர் மேற்கொண்டவைகளை மீளாய்வு செய்தல், அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றமையை தேடிப்பார்த்தல் என்பன பிரதான நோக்கங்களாகும்.

மேற்படி நோக்கங்களை அடைதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய மனிதவளங்கள் கொள்கைகளுக்காக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலும், தீங்கு விளைவிக்கும் குழுக்களுக்கான சமூக பாதுகாப்பினை ஒழுங்கமைத்தல் மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்படும் மனிதவள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல், அவற்றை பின்தொடர்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்காக பேரவையினால் மீளாய்வாண்டினுள் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறெனினும், தேசிய மனிதவளக் கொள்கையினை மீளாய்வு செய்யும் பணியினை தொழில் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்வதற்கு பொருளாதார அலுவல்கள் தொடர்பான அமைச்சரவையின் உப குழுவினால் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் அவதானிப்பு மட்டத்தில் அந்த அமைச்சுடன் இணைந்து பணியில் ஈடுபடுவதாக தலைவரின் பதில் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆண்டினுள் 3 செயற்திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டு அமைச்சருக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த தெனினும், சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்கள் மற்றும் திகதிகள் தொடர்பான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பதில்களின் பிரகாரம் தலைவர் பிரதமரின் ஆலோசகராக கடமையாற்றுவதால், உரிய அறிக்கைகள் தனிப்பட்டரீதியில் உரிய அமைச்சரான பிரதமருக்கு கையளிக்கப்பட்டிருந்தன.

(ii) ஆண்டினுள் பூர்த்திசெய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட 06 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் பௌதீக செயலாற்றல் 60 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையானதாகும்.

(iii) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 37 சதவீதம் அல்லது ரூபா 2,521,137 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்ட பத்து இலட்சம் வேலைவாய்ப்புக்கள் நிகழ்ச்சித்திட்டத்திற்கான கொள்கை வெளிப்பாடொன்றை தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக எதுவித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிராததுடன், வளப் பங்களிப்பாளர்கள் தன்னார்வத்துடன் பங்களித்திருந்த காரணத்தால் செலவினம் குறைவடைந்ததாக தலைவரின் பதில்களின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1997 இன் 18 ஆம் இலக்க மனிதவளங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய பேரவை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் அங்கத்தவர்கள் நிதி, கல்வி, தொழில், இளைஞர் சேவைகள், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் சுகாதாரம் போன்ற 11 அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தலைவர் அடங்கலாக 4 தொழிற்கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அமைச்சரால் நியமிக்கப்படும் துறையில் அதிக அனுபவமுள்ள ஐந்து உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 20 பேரைக் கொண்டமைந்ததாகும்.

ஆண்டிற்காக 12 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும், 2015 ஆம் ஆண்டிற்காக 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், அந்தக் கூட்டங்களிலும் நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதல் மற்றும் செயலாற்றல் தொடர்பில் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையும், அவ்வாறான தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டு அமைச்சருக்கு கையளிக்கப்பட்டிருந்த பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்களை நிர்மாணிக்கும் கொள்கை வெளிப்படுத்தல் கூற்றினைத் தயாரித்தல், கல்விப் பொதுத்தராதர உயர் தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியமைந்த அனைத்து மாணவர்களுக்கும் பட்டமொன்றினை அல்லது டிப்ளோமா சான்றிதழொன்றினை பெற்றுக்கொடுப்பதற்காக பிரேரணையொன்றினைத் தயாரித்தல் மற்றும் மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்கான செலவினத்தை 1.5 சதவீதத்திலிருந்து 6 சதவீதம் வரை அதிகரிப்பதற்கான அரசின் முன் மொழிவினை கலந்தாலோசித்தல் ஆகிய ஆராய்ச்சி அறிக்கைகள் பேரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட 02 கட்டுப்பாட்டுச் சபை கூட்டங்களில் நியமிக்கப்பட்டிருந்த 19 அங்கத்தவர்களிடையே ஒரு தடவையேனும் பங்குபற்றாத அங்கத்தவர்களின் எண்ணிக்கை 05 எனவும், ஒரு கூட்டத்தவையில் மாத்திரம் பங்குபற்றியிருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 07 எனவும் அவதானிக்கப்பட்டது.

அங்கத்தவர்களுக்கு வேலைப்பளு அதிகரித்தமையால் கூட்டங்களுக்கு பங்குபற்றல் வசதியீனம் எனவும், இதற்கான வழிமுறையயொன்றாக அதிகாரச்சட்டத்தினை திருத்துவதற்கான செயற்பாடுகளை ஒழுங்கமைத்தவாறு இருந்த போதிலும், பேரவையின் நிறுவகக் கட்டமைப்பினை மாற்றியமைத்தல் இடம்பெறுகின்றமையால் அது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தலைவரின் பதில் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆராய்ச்சி மீளாய்வு மற்றும் வழிநடத்தல்களுக்கான குழுவொன்று (Steering Committee) நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஆம் ஆண்டின் 02 ரெகியா அருண நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட நபர்களின் எண்ணிக்கையான 3000 இல் 1759 பேர் சமூகமளிக்காமையால் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உணவு மற்றும் குடிபானத்திற்காக ரூபா 208,674 தொகை சிக்கனமற்ற முறையில் செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

2011 திசெம்பர் 23 ஆந் திகதிய டீஎம்ஏ/06 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம், நிறுவனத்தின் செயற்பாடுகள் செயற்திறனாகவும் பயனுள்ள விதத்திலும் போதியளவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்தை உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடும் போது 20 சதவீதம் முதல் 3555 சதவீதம் வரையில் முரண்கள் ஏட்பட்டமையால், பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படவேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நோக்கங்களை நிறைவேற்றுதல் | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நோக்கங்களையும் போதியளவில் நிறைவேற்றுவதற்காக நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நிதியினை ஒதுக்கிக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தியிராமை மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் |

| | |
|---|---|
| | இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) காகிதாதிகள் இருப்புக் கட்டுப்பாடு | காகிதாதிகளை இருப்பிற்கு எடுக்கும் போது பொருள் பெறுவனவு கட்டளையும், பொருட்களை விநியோகிக்கும் போது பொருள் விநியோகக் கட்டளையையும் பயன்படுத்தி முறையான மேற்பார்வையின் கீழ் காகிதாதிகள் இருப்புக் கட்டுப்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்காமை. |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

எனது இலக்கம்: 3/2/12/1 2016 டிசம்பர் 30ம் திகதி

கணக்காய்வாளர் நாயகம் அதிபதி
கணக்காய்வாளர் நாயகம் அதிபதி திணைக்களம்
பத்தரமுல்லை

**<u>இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் 31 டிசம்பர் 2016ம் திகதி நிறைவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கை தொடர்பான 1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)இ ம் பிரிவுக்கு அமைவாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.</u>**

மேற்குறித்த விடயம் தொடர்பாக உங்கள் தொடர்பிலக்கம் VTY/NHRDC/1/15/80 மற்றும் 30.12.2016ம் திகதி கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்பாக,

**2.3 கிடைக்க வேண்டிய கணக்கு**

மீண்டும் வழங்கப்படாத இன்வென்றி பண்டத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்காக முன்னர் சேவையாற்றிய தலைவரிடமிருந்து ரூபா 31,050.00 வை அறிவிடுவதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கோவையிடப்பட்ட வழக்கு 2017.05.21ம் திகதி வழக்கு விசாணை மேற்கொள்வதற்கு திகதி குறிக்கப்பட்டள்ளது.

**2.4 சட்ட ஒழுங்குவிதிகளுக்கு இணங்காமை**

(அ) ஏற்றுக்கொள்கின்றோம். 2016ம் ஆண்டியிருந்து சேதம் மற்றும் இழப்பு தொடர்பான பதிவேட்டினை பேணுதல் வேண்டும்.
நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும், 6 மாதத்திற்கு ஒரு தடவை எரிபொருள் நிரப்புவது தொடர்பாக பரீட்சித்து பார்ப்பதற்கு அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

**3.1 நிதிப் பெறுபேறு**

ஏற்றுக்கொள்கின்றோம்.

2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு அதிகரித்ததற்கு புதிய ஆட்சேர்ப்பு, ஊழியர்களின் சம்பளம் அதிகரித்தமை மற்றும் புதிய கொள்வனவுகள் காரணமாக அமைந்திருந்தன.

**4.1 செயலாற்குகை**

(ஆ) (i) ஏற்றுக்கொள்கின்றோம் .

எதிர்வரும் வருடத்திலிருந்து தயாரிக்கும் கருத்திட்டங்களை எழுத்து மூலமாக அமைச்சருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ii) ஏற்றுக்கொள்கின்றோம்.

(iii) ஏற்றுக்கொள்கின்றோம்.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) 2015ம் ஆண்டு ஜனவரி மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் ஏற்பட்ட அரசாங்க மாற்றத்தின் காரணமாக நிர்வாக சபை அங்கத்தவர்கள் இரு தடவைகள் நியமிக்கப்பட்டனர். நிர்வாக சபை அங்கத்தவர்களை நியமித்தல் உரிய அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் போது தாமதங்கள் ஏற்பட்டன.

நிர்வாக சபைக் கூட்டங்களின் போது ஒவ்வொரு கருத்திட்டத்தின் முன்னேற்றமும் தனித்தனியாக மீளாய்வு செய்யப்பட்டதுடன், நிர்வாக சபை அங்கத்தவர்களின் முன்மொழிவுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

(ஆ) ஏற்றுக்கொள்கின்றோம்.

இது தொடர்பாக முன்னேற்ற மீளாய்வின் போது பணிபாளர் அறிவூட்டப்பட்டள்ளார்.

(இ) நிறுவனத்தின் கட்டமைப்பு மாற்றப்பட்டதனால் சட்டத் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ஈ) ஏற்றுக்கொள்கின்றோம்

எதிர்காலத்தில் ஆராய்ச்சி மீளாய்வு மற்றும் வழிகாட்டலுக்கு குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது.

## 4.3 பொருளாதாரம் இல்லாத கொடுக்கல் வாங்கல்கள்

பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து 2014ம் ஆண்டுக்கான க.பொ.த (உ.த) பரீட்சையை எழுதிய தனிப்பட்ட விண்ணப்பதாரர்களின் பெயர் பட்டியலைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் தபால் அனுப்பப்பட்டதுடன், பாதகைகள், சுவரொட்டிகள், ஊடகங்கள் ஊடாக ஊடாகவும் மற்றும் உரிய மாவட்டத்தின் திறன் அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனத்தின் ஊடாகவும் சமூகம் அறிவூட்டப்பட்டது. அதன்படி, மாணவர்களை அழைப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், திறன் அபிவிருத்தி மற்றும் ஏனைய வழிகளின் ஊடாக பெறப்பட்ட தகவல்களுக்கு அமைவாக பங்களிப்பு செய்வார்கள் என எதிர்பார்க்கப்ட்ட எண்ணிக்கைக்கு அமைவாக கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. அதேபோல். உணவு மற்றும் குடிபானங்களை அதே தினத்தில் பெற்றுக்கொள்ள முடியாமையினால், முன்னமே விலைப்பட்டியல் கோரப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. எனினும் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை எங்கள் கட்டுப்பாட்டுக்கும் அமையாமல் போனதனால், அறிவிக்கப்பட்டதன் பின்னர் அந்த எண்ணிக்கையை குறைப்பதற்கு முடியாமல் போனதனால், அதன் போது மேற்கொள்ளப்பட்ட செலவுகளை நிர்வகிக்க முடியாமல் போனது. அத்துடன், அதன் பின்னர் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் போது இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான வருகை முன்னுதாரணமாக கொள்ளப்பட்டது.

### 5.1 உள்ளக கணக்காய்வு

எங்கள் நிறுவனத்தினுள் உள்ளக கணக்காய்வு அலகொன்று இல்லாமையினால் அமைச்சின் உள்ளக கணக்காய்வு அலகினால் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டம் என அமைச்சின் மீளாய்வுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்ட போதிலும் அதற்கான சரியான பதிலொன்று கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கும் நிர்வாக கட்டமைப்பு மாற்றத்தின் போது நிறுவனத்திற்கு பொருத்தமான கணக்காய்வு பணியாட் தொகுதியொன்றினை ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 5.2 வரவு செலவுத்திட்ட நிர்வாகம்

வருடத்தினுள் நிறுவனத்திற்காக வழங்கப்பட்ட மீண்டுவரும் செலவின எல்லை 21 மில்லியன் ஆவதுடன், வரவுசெலவுத்திட்டத்தின் படி 98.91% வீதம் வரை செலவினை மேற்கொள்வதற்கு நிறுவனத்தினால் இயலும். ஒதுக்கீட்டு தொகையில் திறைசேரியினால் விநியோகிக்கப்படும் மொத்த மீண்டுவரும் செலவினத்தன் 100% வீதத்தை செலவு செய்வதற்கு இயலுமானதுடன், ஒதுக்கீட்டு எல்லையினுள் மிகுதிச் செலவுகள் நிறுவனத்தில் உள்ள நிதி மீதியில் இருந்து செலவழிப்பதற்கு இயலுமானது. ரூபா 21 மில்லியன் தொகை நிதி ஒதுக்கீட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒதுக்கீட்டு எல்லையை மீறிக் கிடைத்த மீண்டுவரும் செலவின எல்லையை மீறி செலவினை மேற்கொண்டுள்ளதான தவறேதும் நிகழவில்லை.

## 6. முறைமை நிர்வாகம்

ஏ) ஏற்றுக்கொள்ளவில்லை

சட்டத்தின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு அந்தந்த கருத்திட்டத்திற்கு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டள்ளது. இதில் இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் மீளாய்வுக் கூட்டத்திற்காக ரூபா 1 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் கொள்கை மீளாய்வு நடவடிக்கைகள் தொழில் அமைச்சுக்கு சாட்டப்பட்டுள்ளதுடன், அதற்காக ஆகுசெலவு மேற்கொள்ளத் தேவை எழாமையினால் அந்த ஒதுக்கீடு வேறொரு செயற்பாட்டு கருத்திட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டு வேறு கருத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி சட்டத்தின் நோக்கத்தை நிறைவு செய்வதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆ) எழுதுகருவிகளின் கையிருப்பு நிர்வாகத்திற்கு முறைமையொன்றை தயாரிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கே.ஏ.லலிததீர
பணிப்பாளர்
தலைவருக்காக